சிவாஜி

பூலோக வைகுந்தம்

வாசல் திறந்ததடா—வைகுந்த
வாசல் திறந்ததடா.

ஆசையினால் ஓடி அன்புடனே திரு
வாசலில் வைகுந்த வாசன் வரும்வழி
வந்து நிறைந்திடவே—மக்கள்
வந்து நிறைந்திடவே—எங்கள்

ஆழியிறை வனெம் அண்ணல் வருகின்ற
வழிமேல் விழிவைத்து வாழ்வுக்கு நின்றேங்கும்
வாசல் திறந் திடுங்கால்—வைகுந்த
வாசல் திறந் திடுங்கால்

உள்ளத் தழுக்கும் உயிரின் குறைகளும்
பள்ளமடைபாயப் போக்கிடவே யெண்ணித்
தேடி நடந்தனரே—மதிற்புற
வீதி கடந்தனரே—உடல்

நோயுற்று நலிவுற்று நொண்டி நொடம்பலர்
வாயற்றுக் கதியற்று வாடிக் கிடந்தனர்
வைகுந்த வீதியிலே—பூலோக
வைகுந்த வீதியிலே—மாலை

அந்திச் சிவப்பொளியல்லாது தீனர்கள்
சிந்தும் இரத்தச் சிவப்பொளியே வெனும்
ரத்னங்கி போர்த்தவனை—எங்கள்
ரங்கன் வரும் எழிலை—எதிர்

நேர நடந்தனர் நேரமில்லை யந்தக்
கோரமெலாம் தமைக் கொன்றிடு மென்றஞ்சிக்
கூசி உளம் நடுங்கி—உயிர்த்
தேசு வயர்ந்த டங்கி

வேகநடை வீசி வீதியிற் பாய்ந்தனர்
வேத முதல்வனை வேண்டித் தரிசிக்க
வாசலில் சேர்ந்திருந்தார்—சொர்க்க
வாசலில் காத்திருந்தார்—எழில்

ஆடி நடந்தவன் ஆங்குவந்தான் உயிர்
ஆசையெலாம் தீர ஆனந்தக் காட்சியைக்
கண்டு மகிழுமுனர்—உளம்
கொண்டு கரையுமுனர்—எதிர்

ஈமொய்க்கு மங்கத்தில் ஈரத் துணியிட்டுச்
சேயொன்று சீழுடன் சிந்திக் கிடந்திடும்
வாழ்வுண்மை அச்சுறுத்தும்—கொடிய
வாழ்வுண்மை நெஞ்சுருக்கும்—மேனி

முத்தங்கி போர்த்துப் புன் முறுவல் புரிந்தங்கு
சித்தத் துறுதியில் சிலையுருவாகிய
அத்தன் அறிதுயிலை—அவன்
அயர்கின்ற கோலத்தினைக்—கண்டு

முத்தொளி மெச்சுமுன் முத்து முத்தாய் மேனி
நித்தம் வளர்த்தவர் நோயுற்ற கோரத்தை
நேரினிற்கண்ட யர்ந்தார்—நோன்பு
நோற்ற பயனறியார்.

பொன்னவிர் மேனியன் பூலோக வைகுந்தம்
பூண்ட திருவருள் போந்தாலும் மண்சிறு
வாடை கலந்திடுமோ—இதுதான்
பூலோக வைகுந்தமோ

—"துவார பாலகன்"

பொங்கல்

தமிழருக்குப் பொங்கல் புனிதமான நன்னாள். அன்று அவர்கள் அகத்தே பால் பொங்கும். மனைகளிலே களி பொங்கும்- ஆண்டு முழுதும் உழைத்துக்கண்ட பலனைப் போற்றும் பொங்கல் நன்னாளின் சிறப்பு இன்று அந்தப் பழைய பொலிவுடன் காணக் கிடைக்காது எனினும் பொங்கலைப் போற்றும் பண்பை நாம் இன்னும் மறந்துவிடவில்லை.

'சிவாஜி' தன் நேயர்களுக்குப் பொங்கல் வாழ்த்துக்கள் மனமுவந்து கூறுகிறான். "பால் பொங்கிற்றா ?" என்று கேட்கிறான். தமிழ் மரபினர் வாழ்வு தழைத்தோங்க வேண்டுமென்று இறைஞ்சுகிறான்.

பொங்குக பொங்கல் !

16-1-49 (சிறுவர் மலருடன்) விலை அணா 2

ஏழாம் அத்தியாயம்

மாநகர் சேர்ந்தனர்

வீரனை அனுகிய ஜீஜா தன் அருமை மைந்தன் சிவாஜியைப்பற்றி அறிந்து கொள்ளத் துடித்தாள். அந்த வீரன் ஜீஜாவை உற்று நோக்கிய போது! துடி துடித்துப் போய் விட்டான். உடலில் இருந்த ரத்த காயங்களையும், முகத்தில் படிந்திருந்த சோர்வையும், ஆடைகள் கிழிந்து கிடந்ததையும் கண்டவன் கண்ணில் நீர் ததும்ப மௌனமாக நின்றிருந்தான்.

“பேசமாட்டாயா? எங்கே, என் குழந்தை? என் அருமை மைந்தன எங்கே? என் மகாராஜா சிவாஜி எங்கே” என்று உணர்ச்சி பொங்கக் கேட்டாள் ஜீஜா.

“உஸ்...உஷாராகப் பேசுங்கள். உணர்ச்சி வசப்பட்டு சப்தம் செய்யாதீர்கள். கோட்டையிலிருந்து தப்பி வந்திருப்பது தெரிகிறது. குதிரை கொண்டு வருகிறேன். இவ்விடத்தை விட்டு உடனே அகலவேண்டும். மொகலாயர் வலை இங்கும் விரிந்திருக்கிறது. நீங்கள் தப்பிச் சென்றது தெரிந்து வலை இன்னும் அகல விரிந்தாலும் விரியலாம்”, என்று பதட்டமாக மெல்லிய தொனியில் கூறிக் கொண்டே வீரன் குதிரை இருக்குமிடம் சென்றான்.

வீரன் இரண்டு குதிரைகள் கொண்டுவந்தான். ஜீஜா ஒன்றிலும், அவன் ஒன்றிலுமாக ஏறிக் கொண்டனர். வீரன் குதிரை முன்னே செல்ல ஜீஜாவின் குதிரை பின்னே தொடர்ந்தது.

காட்டுப்பாதையில் புகுந்த குதிரைகள் அன்று பகல் முழுவதும் கடுகிச் சென்றன. ஒரு இடத்திலும் நிற்கவில்லை. ஆகாரமின்மை குறித்து ஜீஜா வருந்தவில்லை. தன் மைந்தனைக் காணும் துடிப்பு மற்றைய உணர்ச்சிகளை அவளிடமிருந்து அறவே அகற்றிவிட்டது. கடைசியில் இருவரும் சிவாஜி மறைவாகப் பாதுகாத்து வளர்க்கப் பட்டு வந்த இடத்துக்கு வந்து சேர்ந்தனர்.

மலையடிவாரத்தில் குகை போன்ற ஒரு மறைவிடம் அது. அவ்விடத்துக்கு சூழ்புறத்திலிருந்து எங்கும் நேரான பாதையே கிடையாது வெகு சிரமத்துடன் இவ்விடத்தைக் கண்டுபிடித்து சிவாஜியைப் பாதுகாத்து வந்தனர், பொறுப் பேற்ற வீரனும் அவனது நண்பர்களுமாக.

சிவாஜியைக் கண்டதும் ஜீஜா உணர்ச்சி பரவசத்துடன் அவனை வாரியெடுத்துக் கொஞ்சினாள். முத்தமாரி சொரிந்தாள். “கண்ணே” என்று செல்லமாக ஆயிரம் தடவை அழைத்தாள். தலையை வருடிக் கொண்டே “கோட்டையில் நான் செய்த பிரார்த்தனைக்குப் பராசக்தி நல்ல கைம்மாறு செய்துவிட்டாள். பிரார்த்தனையின் மகிமை மகத்தானது” என்று வான் வெளியில் கண் புதைத்துச் சிந்தித்தாள். அங்கே நட்சத்திரங்கள் கண் சிமிட்டிக் கொண்டிருந்தன.

சிவாஜி ரொம்ப வளர்ந்திருந்தான். அவன் முகத்தில் வீரமும், அறிவொளியும் படர்ந்து பொலிவுற்றன. விரைவில் வாலிபனவான்! வீரனவான்! புதிய சகாப்தத்தை சிருஷ்டிப்பான்! தாயின் கனவுகள் இங்ஙனம் வளர்ந்தன.

ஜீஜா தன் மைந்தனுக்குக் கல்வி புகட்டும் அரும்பணியை அன்றிருந்து ஏற்றுக்கொண்டாள். அன்னை பராசக்தியுடன் அவனை அறிமுகம் செய்துவைத்தாள். நாட்டு நிலையை நன்குணர்த்தினாள். ஹிந்துஸ்தானத்தின் மாண்புமிக்க பழமை பற்றிக் கதைகள் கூறினாள். ராமாயண மகாபாரதக் கதைகளையும் அவை உயிர்ப்பித்துக் காட்டிய வீர வாழ்வையும், மகாபுருஷர்களையும் பற்றி அறிவித்தாள்.

ஹிந்துஸ்தானம் சிவாஜியின் அகக் கண் முன்னே தன் முழுப் பொலிவும் பெற்று விரிந்து நின்றது, அன்னையின் கல்வி விளக்கத்தினால். இவ்வாறு சிலகாலம் கடந்தது.

ஜீஜாவும் சிவாஜியும் இங்ஙனம் எளிய வாழ்க்கை நடத்தி வந்த குடிசையில் மராத்திய வீரர் சிலரும், காவலுக்கும், உதவிக்கும் உடனிருந்து வந்தனர். சுற்றுப்புறத்தில் குதிரையேறிச்சென்று, டில்லி-பீஜபுரி ராஜபாட்டையை, யடுத்து மறைந்திருந்து நாட்டு நிலை பற்றிய சேதிகளை இவர்கள் சேகரித்துக் கொணர்ந்தனர்.

இப்பணியில் தீவிரமாக ஈடுபட்டிருந்த மாதவ் என்னும் வீரன் ஒரு நாள் ஒரு ரஸமான சேதியை ஜீஜாவுக்கு அறிவித்தான்.

“டில்லி பாதுஷாவுக்கு யுத்தத்தில் அயர்வு தோன்றி விட்டது, தாயே. போரை நிறுத்த ஏற்பாடுகள் செய்து வருகிறார். படைகளை மீட்டுக் கொள்ள விரும்புகிறார். நம் சுல்தானுக்கும் அவருக்கு மிடையே கடிதப் போக்குவரத்து நடக்கிறது. இத்துடன் மூன்று கடிதங்களை வழிமறித்துப் பார்த்தேன், ராஜ பாட்டைக்குச் சென்று. ஹ....... ஹ....ஹ...ஒரே வேடிக்கை. இவர் அவரைப் புகழ்கிறார். அவர் இவரைப் புகழ்கிறார். ஒருவருக்கொருவர் பட்டம் கொடுத்துக் கொள்கின்றனர்” என்றான் மாதவ்.

ஜீஜாவுக்குப் பெரிய பாரம் நீங்கியதுபோல் இருந்தது. மறைந்து வாழும் தொந்தரவு அகன்றுவிடும் என்ற நம்பிக்கை தோன்றிற்று.

உண்மையில் மாதவ் குறிப்பிட்டது பூரணமான உண்மை தான். அவன் இந்தக் கடிதப் போக்குவரத்துகளை உண்மையாகவே மறித்துப் பார்த்திருக்க வேண்டும்.

டில்லி சக்ரவர்த்தி ஷாஜஹான் போரில் அலுப்புற்றுப் போய்த்தான் இருந்தார். பீஜபுரி எங்கே, டில்லி எங்கே? ஆரம்பத்தில் இருந்த ஆர்வம் அவருக்கு இப்போது இல்லை.

டில்லியின் பளிங்கு மண்டபங்களும், பனி போன்ற மாதரும் பாதுஷாவை மோக மயக்கில் ஆழ்த்திவிட்டனர். பீஜபுரி சம்மந்தமான பிரஸ்தாபம் ஏற்பட்ட போதெல்லாம் அவருக்கு அலுப்பும், கோபமுமே ஏற்பட்டது.

காரியதரிசிகள் சக்ரவர்த்தியின் உள்ளப் பாங்கை உணர்ந்து பரிசுத்தமான பாரசீக மொழியில் பீஜபுரி சுல்தானுக்குக் கடிதமெழுத ஆரம்பித்தனர். அவருக்குப் பட்டங்கள் சூட்டினர். ‘வானவெளிச் சூரியனே, பரிசுத்த ரத்னமே” என்றெல்லாம் புகழ்ந்தனர் ஆனாலும் பீஜபுரி சுல்தான் டில்லி சக்ரவர்த்தியின் கீழ் ஆள்பவர்தான் என்ற நிலையையும் வற்புறுத்த மறந்துவிட வில்லை.

டில்லி சக்ரவர்த்தியின் அன்பும், இதனுடன் நின்றுவிடவில்லை. பனிபோன்ற, முத்து போன்ற, நிலவு போன்ற, குறுக்கத்திப் பூ போன்ற அற்புதக் குதிரையொன்று பீஜபுரி சுல்தானுக்கு டில்லிப் பீடத்தின் பரிசாகச் சென்றது.

பீஜபுரி சுல்தான் உணர்ச்சி வசப்பட்டார். டில்லி சக்ரவர்த்தியை மனதார வாழ்த்தினார். சக்ரவர்த்திக்குத் தன் அன்பையும் பணிவையும் தெரிவித்து நீண்ட கடிதம் எழுதினார்.

“வான சாஸ்திர ஞானியின் கற்பனைபோல் இக்குதிரை வான் வெளியில் உலவுகிறது” என்றது இக்கடிதம்.

இத்தகைய ஓலைப் போக்குவரத்தின் முடிவாக 1637-ம் ஆண்டில் ஒரு உடன்படிக்கை ஏற்பட்டது. பீஜபுரி சுல்தான் ஷாஜஹான் சக்ரவர்த்தியைத் தன் சக்ரவர்த்தியாகவும் ஒப்புக் கொண்டார். மாலோஜிக்கு அளிக்கப்பட்டிருந்த மான்ய பூமிக்கு சற்று வடக்காக பீஜபுரி—மொகலாய எல்லை வகுக்கப்பட்டது. பீஜபுரி சுல்தான் சக்ரவர்த்திக்கு செலுத்தவேண்டிய கப்பத் தொகையும் நிர்ணயமாயிற்று.

இந்த உடன்படிக்கை நடந்த மறு நாள் ஜீஜாவுக்கு பீஜபுரியிலிருந்து லிகிதம் வந்தது. உடனே குழந்தையையும் அழைத்துக்கொண்டு பீஜபுரிக்கு வந்துவிடுமாறு மலோஜி தன் மனைவிக்கு எழுதியிருந்தார்.

தாயும், மகனும் மலைச்சாரலை விடுத்து மாநகரை நோக்கிக் கிளம்பினர். பிரயாணம் இன்பகரமானதாயில்லை. வழி நெடுகப் போரின் நிணை சூன்யம் பரவிக் கிடந்தது. கிராமங்கள் சிதறுண்டு கிடந்தன. வயல் வெளிகள் பாழ்பட்டுப் போயிருந்தன. கோயில்கள் இடிபட்டு நொறுங்கி அழகழிந்து போயிருந்தன. ஜன நடமாட்டமே பல காதங்களுக்கு அற்றுப் போயிருந்தது.

பீஜபுரி நகரை நெருங்கிய பின்னர் தான் மனித நடமாட்டமும், கலகலப்பும், பசுமையும் தோன்றின. சூழ்ந்திருந்த தோட்டங்களும், துறவுகளும், கோபுரங்களும், மாளிகைகளும், அழகொளிவீசி ஆறுதல்கொடுத்தன.

(தொடரும்)

அமிர்தாஞ்சன்

சகல வலி நோவுகளுக்கும்

கைகண்ட மருந்து

எங்கும் கிடைக்கும்

அமிர்தாஞ்சன் லிமிடெட்.,

சென்னை, பம்பாய், கல்கத்தா, பெங்களூர்.

REGD. INSIST ON Original Wheel Mark Diamonds REGD.
BIG BAZAAR — TRICHINOPOLY.

CHENNIS SPECIAL DIAMONDS
REGD. (FAMOUS FOR BRILLIANCE) REGD.
CHENNI RADHAKRISHNAN & CO.,
BIG BAZAAR, TRICHINOPOLY.

அண்ணல் நினைவு இதழ்
31-1-49 இதழ்
அஹிம்சா மூர்த்தி
அண்ணல்
காந்தியடிகளின்
ஞாபகார்த்த இதழாகப்
பல சிறந்த அம்சங்களுடன் அழகிய முறையில்
வெளிவரும்.

சிவாஜி

ஆசிரியர் :— திருலோக சீதாராம்

கோட்டை	திருச்சி, 16—1—49	முற்றுகை
14	சர்வதாரி-ளு தை-மீ, 3-உ	7

அடுத்த 23-1-49 இதழில்
“மூர்த்தி” எழுதும்
சூர்யா பிலிம்சாரின்
ஆண்டாள்
தமிழ்ப்பட விமர்சனம்
வருகிறது

அறிஞர் நடேசனும் ஆசிரியர் பிரெல்வியும்

பத்திரிகையுலகின் பெரு நஷ்டம்

“ரிவ்யூ”வும் “கிராணி”களும்

ஜாம்பவான்கள் என்று சிலரை நாம் செல்லமாக அழைப்பதுண்டு- அவர்களது ஆயுட்காலத்தை மாத்திரம் கருதி நாம் அப்படிக்கூறுவதில்லை. அவர்கள் தமது வாழ்க்கையில் கண்டிருக்கும் அனுபவத்தை அடிப்படையாக வைத்தே அவர்களை ஜாம்பவான்களாக்க முற்படுகிறோம்.

சில நாட்களுக்கு முன்னால் காலமான ஜி. ஏ. நடேசன் அவர்கள் இத்தகைய ஜாம்பவான்களில் ஒருவர். பத்திரிகைத் துறை, புத்தக வெளியீட்டுத் துறை இரண்டிலும் அவர் ஜாம்பவான் என்றே கூறவேண்டும்

ஜி. ஏ. நடேசனவர்களைப்பற்றி நினைக்கும்போது வலங்கைமான் சாஸ்திரியார், பெரோஸ்ஷா மேத்தா, ஸர் சி. ஒய். சிந்தாமணி போன்ற மிதவாத மாணிக்கங்கள் நினைவில் வருகிறார்கள். இந்திய தேசியம் மிதவாத வானத்தில் சஞ்சரித்துக் கொண்டிருந்த அந்த சகாப்தத்தில்தான் ஜி. ஏ. நடேசன் போன்றாரது பெருமை பூரணமாகப் பொலிவுற்றது.

மிதவாதிகளுக்கும், தீவிர காங்கிரஸ்காரர்களுக்கும் இருக்கும் பேதத்தை அழகாக எடுத்துக் காட்டவேண்டுமானால் மிதவாதிகளைக் கலைஞர்கள் என்றும், மற்றவரை போர்வீரரென்றும் குறிப்பிட்டால் போதுமானது.

நடேசனவர்கள் இந்திய அரசியல் கலாசார வாழ்வில் கலைஞராகவே உதயமாகிக் கலைஞராகவே மறைந்தார்.

கூர்ந்து கவனிப்பவர்களுக்கு - விருப்பு வெறுப்பற்ற பார்வையாளருக்கு ஒரு முக்கிய விஷயம் தெளிவாகப் புலப்படும் ஹிந்து மகா சபையின் வயது முதிர்ந்த வர்க்கத்தினரிடையேயும், மிதவாத பரம்பரையின் மூல புருஷர்களிடையேயும் (இன்று இவர் சிலர் இருக்கிறார்கள்) காணக் கிடைக்கும் அறிவுச் செல்வம் காங்கிரஸ்வாடையில் கிடையாது இதற்கு அரசியல் போக்கே முக்கிய காரணம்என்று சொல்ல வேண்டும்.

நடேசனவர்கள் இந்த கலைஞர் அறிஞர் வர்க்கத்தைச் சேர்ந்தவர்தான். ஸ்ரீனிவாச சாஸ்திரியாரைப் போல் நடேசனவர்களும் தஞ்சாவூர்க்காரர் தான்.

ஆரம்பகாலத்தில் பலவருடங்கள் அவர் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்து பணிபுரிந்ததுண்டு. ஆனால் 1919-ம் ஆண்டில் மிதவாதம் அவரைக் கவர்ந்தது, காங்கிரஸ் ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட ஆரம்பித்தவுடன் அதனின்று விலகிய நடேசனவர்களுக்கு மிதவாதம் கௌரவமான அடைக்கலம்கொடுத்தது.

நடேசனவர்கள் ஏறக்குறைய கால் நூற்றாண்டு சென்னை நகராண்மைக் கழகத்தில் அங்கத்தினராயிருந்திருக்கிறார். சர்வகலாசாலை செனேட், சிண்டிகேட் ஆகியவற்றிலும் அங்கம் வகித்துமிருக்கிறார்.

மகாத்மா காந்தியடிகளுக்கும், நடேசனுக்கும் நேர்ந்த நெருங்கிய தொடர்பும், நேசமும் தென்னாப்பிரிக்க இந்தியர் நலவுரிமைக்காக, அந்த ஆரம்ப காலங்களில் சேர்ந்து சிந்தித்துச் செயலாற்றியதுண்டு உண்மையில் மகாத்மாவைத் தென்னாட்டுக்கு அறிமுகம செய்துவைத்த முதல்வரில் முதல்வர் நடேசனவர்கள்.

நடேசனவர்களை நாம் உண்மையில் போற்றி வணங்கவேண்டியது அவர் ஒரு திறமை வாய்ந்த பிரசுரகர்த்தர் என்ற முறையில்தான். நடேசனது வடமொழி - மொழிபெயர்ப்புப் புத்தகங்கள் உலகப் பிரசித்தி பெற்றவை. இங்கிலாந்தில் அவற்றிற்கு விசேஷ செல்வாக்குண்டு.

நடேசனவர்களது பிரசித்தி பெற்ற “இந்தியன் ரிவ்யூ” பத்திரிகை ராமானந்த சாட்டர்ஜியின் “மாடர்ன் ரிவ்யூ” போன்ற சர்வதேச பிரசித்தமும், தரமும் உடையது. இப் பத்திரிகை 1900-ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு இன்றுவரை இடைவிடாது அருமையான தொண்டாற்றி வந்திருக்கிறது.

நடேசனவர்களது நட்பும், அறிஞர் தொடர்பும் ரொம்ப விசாலமானது. இங்கிலாந்தில் அவருக்கு ஏராளமான பிரபலஸ்தர்கள் நெருங்கிய நண்பர்கள்.

இந்த நட்பை அவர் கீழ்க்கடையிலேயே சேகரித்துத் திறமையுடன் காப்பாற்றி வந்திருப்பது பெருமைப்படத் தக்க விஷயமாகும்.

நடேசனவர்களது மறைவு சென்னை மாகாணத்துக்குப் பெரிய நஷ்டம் என்று சம்பிரதாயமாகச்சொல்வதை விடுத்து, இந்தியாவின் மிதவாத-அறிஞர் குலத்துக்கு மத்தான நஷ்டம் என்று கூறுவது அதிகப் பொருத்தமாயிருக்கும்.

ஃ ஃ ஃ

சையது அப்துல்லா பிரெல்வி “பம்பாய் கிரானிகிள்” பத்திரிகையின் ஆசிரியராக இருபத்திநான்கு வருடங்கள் தொடர்ந்து உழைத்தவர் என்பதுடன் அவர் ஒரு தீவிரமான காங்கிரஸ் முஸ்லீம் என்பதும் குறிப்பிடத்தக்கது. அகில இந்திய பத்திரிகை ஆசிரியர் மகாநாட்டுத்தலைவராகவும் இருந்திருக்கிறார் பிரெல்வி.

பிரெல்வி அவர்களை சரியாக மதிப்பிட வேண்டுமானால் பத்திரிகையின் மூலம் அரசியல் சார்ந்து நின்ற ஒரு லோகாயத - அரசியல்வாதி என்று கூற வேண்டும். “கிராணிகள்” பத்திரிகைக்கு அவர்நேரடியில் செய்த சேவை என்னவென்று கண்டுபிடிப்பது சிரமமாயிருந்தபோதிலும், அவர் ஆசிரியராயிருந்த காலத்தில் அவரைச் சூழ்ந்து நின்று தொண்டாற்றிய கராகா, அஹமது அப்பாஸ் போன்ற பலரது ஒளி அவரையும் பிரகாசிக்கச் செய்திருக்கிறது என்பதை மறுக்க முடியாது.

“பம்பாய் கிராணிகிள்” பத்திரிகைக்கு இன்று இவ்வளவு கௌரவம் கொடுக்கப்படுகிறதென்றால் அதற்கு மூல காரணம் பெஞ்சமின் ஹார்னிமான் என்பதை நாம் மறந்துவிட முடியாது.

தேசிய முஸ்லிமாக இருப்பதே தனிப் பெருமையாக இருந்த காலத்தில் காங்கிரஸ் அரசியலில் பிரெல்விக்கு நல்ல கௌரவம் ஏற்பட்டது. அந்த கௌரவத்தின் மணம் இன்றுவரை அவரைச் சூழ்ந்திருந்து பெருமைப்படுத்தியிருக்கிறது.

பிரெல்வியின் மறைவு யாருக்கு நஷ்டம் என்று குறிப்பாகக் கண்டுபிடித்துச் சொல்வது சிரமம்தான். எனினும் “தேசிய முஸ்லீம்” சமூகத்துக்கு அவரது மறைவு நஷ்டமாயிருக்கத் தவறாது என்றே எண்ணுகிறோம்.

*

திருச்சி ஸ்டார் டாக்கீஸ்

நீங்கள் நிச்சயமாக ஓர் உன்னத படத்தை பார்க்கத் தவறுகிறீர்கள். இன்னுமா தாமதம்!

16-1-49 முதல் 12-வது வாரமாக நடைபெறும்

ஜுபிடர் மோகினி தமிழ் படம்

V. N. ஜானகி, மாதுரிதேவி, T. S. பாலையா, புளிமூட்டை, லலிதா, பத்மினி நடித்தது

தினசரி 2-காக்ஷிகள் மாலை 6, இரவு 10-மணிக்கு
சனி, ஞாயிறுமட்டும் மாட்னி பகல் 2-மணிக்கு



அனுபவ ஞானியின் குறிப்புகள்

திருலோக சீதாராம்

வந்து திரும்பினார்

ஊரைவிட்டுச் சில நாள் வெளியே இருந்துவிட்டுத் திரும்பினாலே சொந்த ஊரில் கொஞ்சம் மதிப்பு அதிகம் தான். வெளிநாட்டுக்கே போய்விட்டு வந்தால் கேட்க வேண்டுமா? சொல்லப்போனால் வெளி நாட்டுக்குப் போய்த் திரும்பிய பிறகுதான் விவேகானந்தருக்குக்கூட இந்தியாவில் "மார்க்கெட் நிலவரம்" உயர ஆரம்பித்தது.

நாயுடு அவர்கள் ஐரோப்பிய யாத்திரை முடித்துவிட்டுத் திரும்புகிறார் என்ற செய்தி இங்கே கொஞ்சம் பரபரப்பை உண்டாக்கத்தான் செய்தது. மேலும் தீப் பிடித்த கப்பலில் 'ஆம்புலன்ஸ்' சேவையுடன் தீரச் செயல் புரிந்து தப்பி "வெள்ளைக்காரன்" ஊரெல்லாம் சுற்றித் திரும்பிய நாயுடு வருகிறார் என்றால் கேட்கவேண்டுமா?

கொழும்பிலிருக்கும்போதே அவரை வாழ்த்தியும் வரவேற்றும் சென்னையில் ஒரு பாராட்டு விருந்துக் கூட்டத்திற்கு அழைத்தும் தந்திகள் எதிர்கொண்டன. இந்தமாதிரி ஆரவாரங்களெல்லாம் துளிக்கூட நாயுடுவுக்குப் பிடிக்காது. 1944-ல் கோவையில் தன்னுடைய பெரிய பங்களாவில் எழுத்தாளர்களின் முதல் மகாநாடு நடந்தபோது சாதாரண கிராமவாசிபோல் அங்கு வளையவந்த நாயுடு அவர்களைப் பார்த்த எழுத்தாளநண்பர்கள் விளம்பரத்தைக் கண்டு அவர் அஞ்சி ஒதுங்குவதை நன்கு தெரிந்துகொண்டிருப்பார்கள். மகாநாட்டுக்கு இடவசதியளிக்க அவர் ஒப்புக்கொண்ட போது "என்னைப் பற்றிப் புகழுரைகளோ, நன்றியுரைகளோ மகாநாட்டில் யாரும் சொல்லக்கூடாது என்ற நிபந்தனையை ஏற்றுக்கொண்டால் மகாநாட்டுக்கு இடம்தானம் பிரமாதம்" என்று நாயுடு முதலிலேயே அணை கோலிக்கொண்டார் என்றால் பார்த்துக்கொள்ளுங்கள். ஆனால் மகாநாட்டினர் இந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றவில்லை. தங்கள் உணர்ச்சிப் பெருக்கினாலும் அன்பினாலும் அவர்கள் இப்படித் "தவறு" இழைத்ததை நாயுடு புன்முறுவலுடன் சமாளித்துக்கொண்டார்.

எழும்பூரில் வரவேற்க நண்பர்கள் காத்திருக்கக் கூடுமென்பதைத் திட்டமாய் அறிந்த நாயுடு அதற்கு முந்திய ஸ்டேஷனிலே இறங்கி ஒரு நாள் தாமதித்தே சென்னை சேர்ந்தார். ஆயினும் ஆர்வமிக்க இளைஞர்கள் அங்கே காத்திருக்கக்கண்ட போது அவரே திகைத்திருக்க வேண்டும். முன்பின் பழகியிராத் மாணவர்கள் அந்தக் கூட்டத்தில் இருந்தார்கள். அவர்களுடைய ஆர்வத்தையும் அறிவுத் தாகத்தையும் கண்ட நாயுடு அவர்களில் எண்பதின் மருக்கு மாதம் பத்து பவுன் வீதம் உபகாரச் சம்பளம் உதவினார். ஆனால் அவருடைய கண்டிப்பான நிபந்தனை அங்கும் உண்டு. இதன் பயனாக அந்த எண்பதின்மரும் தனித்தனியாக ஒவ்வொருவரும் மற்றவர் பெற்ற உதவியை அறிய முடியாதாராயினர். படாடோபமின்றி அமைதியான உதவியை அதைச் செய்வதனாலான ஆத்ம திருப்திக்காகவே அவர் புரிந்திருக்கவேண்டும் அல்லவா!

சுமக்க முடியாத புகழ்மாலைகளையும் பூமாலைகளையும் சுமந்து தன்னுள் சிரித்துக் கொண்டார் நாயுடு. மறுநாள் கோவை வந்து சேர்ந்தார்.

உலகில் சுற்றித் திரிந்த சூழ்நிலைகளிலும் வெவ்வேறு பிரதேசங்களிலும் அடைந்த அனுபவ ஞானம் பெரிய பொக்கிஷமாகி விடுவது வாழ்வில் பெரும் பயன் விளைவிக்குமென்ற தத்துவத்திற்கு ஒரு நடமாடும் சாட்சியமாக இலங்குகிறார் நாயுடு; எனவே மறுமுறையும் வெளிநாட்டு யாத்திரைபுரிய அவா விளைந்ததில் வியப்பில்லையல்லவா? ஆனால் இந்தத் தடவை தேச தேசங்களையெல்லாம் சென்று பார்க்க வேண்டுமென்ற காட்சி வியப்புமட்டும் அவருடைய நோக்கமாக இருக்கவில்லை. ஒவ்வொரு நாட்டிலும் போக்குவரத்து ஏற்பாடுகளும் மோட்டார் யந்திரத்தொழிலும் வளர்ச்சியுற்று வரும் உண்மை நிலையை உய்த்துணர்ந்து பயில வேண்டுமென்ற துடிப்பே இரண்டாவது பிரயாணத்திற்குக் காரணமாயிருந்தது. ஒவ்வொரு தொழிற்சாலையையும் அவர் நேரே சென்று ஆராய்ச்சி புரியத் தவறவில்லை. கல்லூரிகளும் பல் கலைக்கழகங்களும் இங்கிலாந்தெங்கும் நாயுடுவை ஆவலுடன் வரவேற்று மகிழ்ந்தன. இந்தப் பிரயாணம் தொடர்ந்து பல மாதங்கள் நடைபெற்றது. நாயுடு அவர்கள் பிரயாணத் தாகம் மிகுந்தவர். இப்போதுகூடக் கைநிறைய-தவறு -வண்டி நிறையப் புத்தகங்களை எடுத்துக்கொண்டு நாட் கணக்கில் ரயில்வண்டியிலேயே வாசம் செய்வதுண்டு. நீங்கள் கேட்டால் ஆச்சரியப்படுவீர்கள். கோவையிலிருந்து சென்னை வரையிலும் போய் அடுத்த வண்டியில் கோவைக்குத் திரும்பி மறுபடியும் பழையபடி சென்னை—மீண்டும் கோவை—இத்தனையும் ரயில்வே ஸ்டேஷனுடன் சரி—பிளாட்பாரத்தை விட்டு வெளியே ஜாகை வைத்துக் கொண்டு இளைப்பாறக்கூட இடமில்லை—திட்டப்படி இத்

(6-ம் பக்கம் பார்க்க)

பாத்ருடுவின்

பாலசஞ்சீவினி (Regd.)

(இது ஒன்றுதான் அசல் விஜயநகர மருந்து)

குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டி வியாதிகளுக்கு
சொற்ப காலத்திலேயே நிச்சய குணமளிக்கும் சிறந்த மருந்து.
58 வருஷகாலமாகப் பல்லாயிரக்கணக்கான குழந்தைகளை இக் கொடிய துலைக்கட்டி வியாதியினின்று காப்பாற்றி வருவதனால் டாக்டர்கள் இச் சஞ்சீவினியையே உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள்.
எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.
போலி மருந்துகளைக் கண்டு ஏமாறாதீர்கள்.

டாக்டர் பிள்ளா பாபய்யா பாத்ருடு & பிரதர்,
11, தெற்கு மாடவீதி, மயிலாப்பூர், மதருஸ்—4.

கும்பகோணம் கிளை :—
7, சாரங்கபாணி கோவில், கீழவீதி.

திருச்சி கிளை :—
15, புகழியபிள்ளை தெரு, தெப்பக்குளம் போஸ்டு.

SUB-COURT TIRUCHI
O. P. No. 139/48

In the matter of the debts due to Deceasd P. S. Munisamy Chettiar

P. S. Krishnasamy Chettiar —Petitioner.

Minor Saraswathi by Guardian Munisami Chettiar and others—Respondents

Whereas the Petitioner above has filed an application to this Court for issue of a Succession Certificate of the debts due to the above decd. P.S. Munisami Chetty under Part X of the Indian Succession Certificate Act, and the same is posted for hearing before the above Court on 18-1-49 when persons willing to oppose may appear and oppose.

Trichy 9-1-49 } (sd) M. V. Sankaran Advocate.

GURU TIGER PILLS

குரு டைகர் மாத்திரை

காலராவுக்கு, கைகண்ட நிச்சய நிவாரணி!

14 அணா

குரு களிம்பு

Guru Ointment.

படை, சகல சர்மரோகங்களுக்கும் ஏற்ற நிவாரணி.

விலை அணா 14.

Alvar

டாக்டர். ஏ. மதுராம் ஸன்ஸ்
மருந்து சாலை. திருச்சினப்பள்ளி.

கலியாண காலங்களுக்குத் தேவையான எல்லாவிதமான பட்டு ஜவுளிகளுக்கும்

பாபு இண்டஸ்ட்ரீஸ்

Slate Manufacturers &
பட்டு ஜவுளி வியாபாரம்
டவுன் ஸ்டேஷன் ரோட்
திரிச்சிராப்பள்ளி

அண்ணல்பற்றி அரிய நூல்

★

மூன்று பிரபல ஆங்கிலேயர்கள் ஒன்றுசேர்ந்து அண்ணலின் வாழ்க்கை வரலாறுகளேயும் அரிய சேவைகளேயும்பற்றி ஒரு புத்தகம் எழுதியுள்ளனர். இப்புத்தகம் வருகிற ஜனவரி 30-ந் தேதியன்று வெளிவரும்.

இப்புத்தகத்தின் ஆசிரியர்களிலொருவர் தென்னுப்பிரிக்காவில் காந்திஜியுடன் சிறைவாசம் செய்தவர். அதுபோது இவ்வாசிரியரும் மகாத்மாவும் ஒரே சிறை கொட்டிலை பகிர்ந்து கொள்ளவேண்டியதாயிருந்தது. இவர்தான் புதிய புத்தகத்தின் முதல் 19 அத்தியாயங்களே எழுதிய எச். எஸ். எல். போலக்.

1904-ல் காந்திஜி தென்னுப்பிரிக்காவில் 'இந்தியன் ஒபினியன்' என்ற வாரப்பத்திரிகையை ஆரம்பித்தபோது, போலக் 'டிரான்ஸ்வால் கிரிடிக்' என்ற பத்திரிகையின் ஆசிரியராயிருந்தார். ஆனல்காந்திஜியும்,போலக்கும் சீக்கிரத்தில் நெருங்கிய நண்பர்களாயினர். 1907-ல் போலக் 'இன்டியன் ஒபின்யன்' ஆசிரியரானுர். அதே வருடத்தில் இவர் காந்திஜியுடன் சிறைக்குச் சென்றூர் அதுமுதல் போலக் காந்திஜியின் சீடர்களில் ஒருவரானுர்.

புதிய புத்தகத்தின் மற்ருெரு ஆசிரியர் பிரசித்திபெற்ற எழுத்தாளரான எச். என். பிரெயில்ஸ்போர்ட். இந்திய நிலேமைகளே நன்கு அறிந்த இவர் மகாத்மா வாழ்க்கையின் மத்தியபகுதியை எழுதியுள்ளார். 1915-லிருந்து 1939-வரை பாரததேசத்தின் சுதந்திரத்திற்காக அண்ணல் நடத்திய அறப்போரின் முழு விவரங்களேயும் பிரெயில்ஸ்போர்ட் எடுத்துரைத்துள்ளார்.

மூன்ருவது ஆசிரியர் மாஜி இந்திய மந்திரியும் பிரபல ராஜதந்திரியுமான லார்ட் பெதிக்லாரன்ஸ். 1939-க்கப்புறம் காந்திஜியின் அருஞ் செயல்களேயும் 1947-ல் அவர் உலக உத்தமராக போற்றப்பட்டதையும், 1948 ஜனவரி துக்க சம்பவத்தையும் லார்ட் பெதிக்லாரன்ஸ் இந்நூலில் தீட்டியுள்ளார்.

ஸ்ரீமதி சரோஜினி நாயுடு, ஐக்கிய மாகாணத்தின் கவர்னர், இந்நூலுக்கு வெகு உருக்கமான முகவுரையொன்றை எழுதியுள்ளார்.

இப்புத்தகத்தை பிரசுரிப்பவர்களான லண்டன்ஒட்ஹாம்ஸ் கம்பெனியார் புத்தகத்தின் முன் பிரதிகள் சில இந்தியாவுக்கு ஜனவரி மாதத்தில் அனுப்பப்படும் என்று கூறுகின்றனர். மார்ச் மாதத்தில் இப்புத்தகம் இந்தியாவில் விற்பனேக்கு தயாராகவிருக்கும்.

✱

540 பவுண்டை

(10 லக்ஷத்தால் பெருக்குக.

டீ தொழிலில் 10 லக்ஷம் தொழிலாளிகள் இருக்கிறூர்கள். அவர்கள் வருஷமொன்றுக்கு 54 கோடி பவுண்டு டீயை உற்பத்தி செய்கிறூர்கள். டீ நமது சர்வதேச விலேபொருள்மட்டுமல்ல. நம் நாட்டிலிருந்து ஏற்றுமதியாகும் பொருள்களில் இரண்டாவது ஸ்தானம் வகிக்கிறது. 7,00,000 ஏகரா நிலத்தில் இப்பயிர் செழுமையாக வளர்கிறது. வெளிநாட்டுநாணயச் செலாவணியில் நம் நாட்டுக்குத் தேவையான உணவுப்பொருள் இறக்குமதிக்காக வருஷமொன்றுக்கு 40 கோடி ரூபாய்களே யளிப்பதுடன் இந்நாட்டிலும் லக்ஷக்கணக்கான வீடுகளில் சுகமளிக்கும் ஒரு சிறந்த பானமாக விளங்குகிறது.

டீ யைப்பற்றிய சில உண்மை விவரங்கள்.

* 1945-47ம் வருஷங்களில் நமது டீ ஏற்றுமதி ரூ. 120 கோடி பெறுமானமுள்ள அயல்நாட்டு நாணயச் செலாவணி யளித்திருக்கிறது.
* இத்தொழிலில் 10லக்ஷம் ஆண்களும்பெண்களும் ஈடுபட்டிருக்கின்றனர்.
* உள்நாட்டில் அருந்தும் டீயிலிருந்து பவுண்டு ஒன்றுக்கு 3 அணு வரியும் ஏற்றுமதி செய்யப்படும் டீயிலிருந்து பவுண்டு ஒன்றுக்கு 4 அணு வரியும் சர்க்காருக்கு கிடைக்கிறது. நாட்டு ஜோனுவுக்கு வருஷ மொன்றுக்கு கிட்டத்தட்ட ரூ. 13 கோடி வரும்படி கிடைக்கிறது.
* மேலும். டீ கம்பெனிகள் செலுத்தும் வருமான வரி மூலமாக சர்க்காருக்கு கணிசமான தொகை கிடைக்கிறது.

டீ

ஒரு மகத்தான இந்தியக் கைத்தொழில்

இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது.

லிப்டன்ஸ்

என்றால் முதல்தரமான டீ

சிவாஜி

அறவலி காத்து நாளும் அன்னையின் பணிக்கென்றே நம்
உறையிலே உறங்கும் வீரம் உருவினோம் ஓங்கிவிட்டோம்.

திருச்சி. 16—1—49

பொங்கல் பெருநாள்

ஆண்டு தோறும் தைபிறக்கிறது. ஆனால் நல்ல உணவுக்கு வழிதான் பிறப்பதில்லை. கற்பனைசக்தி படைத்த தமிழ் மக்கள் பொங்கல் வாழ்த்து பரிமாறிக்கொள்வதில் இன்பம் காணும் திறமை படைத்திருக்கிறார்கள். இந்த ஆண்டு பொங்கற்பானையில் ரேஷன் அரிசி இலையில் போட்டதும் மக்குவாடை கலந்த ஆவியடிக்கும். சுதந்திரம் வந்துவிட்ட பிறகு இதற்காக நாம் பெரிதும் வருந்தவில்லை. ஆயினும் இந்த நிலை தீரவேண்டுமென்று கவலை கொள்ளாமல் போட்டதைச் சாப்பிட்டுவிட்டு எழுந்து போய் விட முடியுமா? வெறும் உணவு பெருக்கும் பிரசாரத்தால் நல்ல அரிசியைக் கொள்முதல் செய்து நாற்ற அரிசியைப் பண்டமாற்றித்தரும் நிர்வாகத்தைப் புகழ்ந்து மாலை சூட்டத்தான் மனம் கொள்ளுமா? ரேஷன் ஒரு "பாஷாணக"ப்பரிணாமம் அடைந்து கொண்டிருக்கிறது. பூசாரத்தையும் நீர்வளத்தையும் பயன்படுத்திப் பிறர்கை எதிர்பாராத செந்நெல் கொழிக்க விரிந்தபூமி இருந்தும் வேண்டிய திறமை அரசாங்கம் பெற்றிராவிட்டால் சில ஆண்டுகள் திட்டமாவது கண்டு சீர் செய்யாவிட்டால் இப்படி எத்தனை தலைமுறைகள் நாம் சோற்றுக்குத் திண்டாட வேண்டியிருக்குமோ! பொங்கல் உழைப்புத் திருநாள் உணவுப் பெருநாள். உலையில் பால் பொங்கும்போது நமக்கு உணர்ச்சியும் பொங்குகிறது. அதில் மகிழ்ச்சியும் பொங்கவேண்டுமென்பதுதான் நமது விருப்பம்.

காமராஜர்.

தமிழ் நாட்டு அரசியல் வாழ்விலேயே காமராஜ் போன்ற ஒருவர் பிறந்ததே கிடையாது. ராஜதந்திரத்தில் தேர்ந்த பேரறிஞராக அவர் திகழ்கிறார். அவருடைய செயல் திறன் சரித்திரப் புகழ் பெறத்தக்கது. விடுதலைப் போராட்டத்தின் இறுதி நிலையிலும் வெற்றி வாழ்வின் தொடக்க நாட்களிலும் தமிழ் நாட்டின் பெரும் தலைவராகத் திகழும் பெருமை அவருக்கு இருக்கிறது. தமிழ் நாட்டுத்தலைவர்களாக முன்பு திகழ்ந்தவர் பெரும்பாலோர் தங்கள் வாழ்நாளிலேயே சிந்துவாரற்ற நிலைமைக்கு "உயர்ந்து" மறைந்தவர்களே அதிகம். தமிழ் நாட்டிற்குப் பரிந்து கொண்டு மேலிடம் மேலிடம் என்று ஒன்றைக் குறைசொல்ல சிலருக்கு இடம் இருந்து கொண்டிருந்தது. அந்த மேலிடத்தைக் கொண்டு காமராஜைக் கவிழ்த்து விடலாம் என்று சிலர் மனப்பால் குடித்ததும் உண்டு. மேலிடம் தலையிட்டுப் பின்னர் பின்வாங்கியதும் சிலசமயம் ஆக்ரமித்ததும் கூட உண்டு. என்ன ஆனால் என்ன? தமிழ் நாட்டின் "நிரந்தரத்தலைவர்" காமராஜர் என்பது இன்று வெள்ளிடைமலை. இனிமேல் காமராஜுக்கு மேற்பட்ட மேலிடம் ஒன்று இருக்கமுடியாது. குறைப்படுவோர் மோதிக்கொள்ள வேண்டிய அந்தத் தலைமைப் பீடத்தில் மேலிடத்து மேட்டுக் கூரையைத் தாங்கும் தூண்களில் ஒருவர் இனி காமராஜர். காமராஜரின் தலைமையில் அனைத்திந்திய ஆட்சிப் பொறுப்பில் தமிழ்நாட்டின் நிலைமை பாதுகாக்கப்பட இடமிருக்கிறது. அல்லது காமராஜரையும் சேர்த்துக் குறைகூற வழி திறக்கிறது. நல்லது நடைபெறட்டுமென்பதே நமது விருப்பம்.

காரியதரிசி காளா.

காளா வெங்கட்ராவ் காங்கிரஸ் காரியதரிசியாக வந்திருப்பதுபற்றி ஆந்திரர்கள் "மனவாடு" உணர்ச்சியில் பெருமையடைவார்கள். நாம் பெருமையுடன் நம்பிக்கையும் மகிழ்ச்சியும் அடைகிறோம். காளா ஒரு கர்மவீரன். நேர்மையும் துணிவும் படைத்தவர். உலக்கை தேய்ந்து உளிப்பிடியானது போல் ஜெமீந்தார் ஒழிப்புச் சட்டம் எததனையோ எதிர்ப்புகளுக்கு மிடையில் உயிரும் உருவும் பெற்று விட்டதென்றால் அது ஒன்றே காளாவின் கர்ம சிரத்தைக்குச் சான்றாகும். காரியக் கமிட்டியில் அவருக்கு இடம் கிடைத்திருப்பது "அரியதன்று. அவர் ஆற்றலுக்கேற்றதே" மந்திரிபதவியை விட்டு அவர் செல்வதை மகத்தான தியாகம் என்று கருதவேண்டியதில்லை. காங்கிரஸ் காரியதரிசி பதவி சுண்டைக்காய் மந்திரி பதவிதானா? மந்திரிகளை மடக்கி ஆட்டும் மகத்தான பதவி அவருக்கு விருது வழங்கியது போல் அல்லவா?

கல்வி மந்திரி.

அவினாசியாரைத்தான் குறிப்பிடுகிறோம். நல்ல தங்கமான மனிதர். ஆனால் மந்திரம் தேர்ந்த தந்திரி அல்ல அவினாசியார் அவசியமான நன்மைகளுக்கு அனாவசியமான முறைகளைக் கைக்கொண்டு கெட்ட பெயர் வாங்கிக்கொள்ளுகிறார் என்பதுதான் வருத்தமாயிருக்கிறது நமக்கு. வேண்டியவர்களிடம் பொல்லாப்பு. எதிர்க்கட்சியாரிடமிருந்து தாக்குதல். மந்திரிக்கழகு வரும்பொருள் உரைத்தல் அல்லவா? எண்ணித் துணிக கருமம் துணிந்தபின் எண்ணுவ தென்பதிழுக்கு. இதெல்லாம் படித்தறிந்த கல்வி மந்திரி இவற்றைக் கடைப்பிடிக்காமல் காரியம் செய்வதில்தான் கஷ்டங்கள் முளைக்கின்றன. மெய்யுடையொருவன் சொலமாட்டாமையால் பொய்போலும்மே பொய்போலும்மே என்ற இரககமொழிக்கு அவரே இலக்காகத் திகழ்கிறார். ஹிந்தி விஷயம் சினிமாப்பட நீளக் குறைப்பு இப்படி அவர் தலையிடும் விஷயங்களெல்லாம் தகராறுதான். ஆரோக்கியம் கெடாமல் இருக்கப் படத்தின் நீளத்தைக் குறைக்கவேண்டுமென்று கூறுகிறார். இந்த தத்துவ தரிசனம் அவருக்கு ஏற்பட்ட விதத்தை எவ்வளவு ஆராய்ந்தாலும் யாருக்கும் புரியாவிட்டால் என்னசெய்வது? ஆரோக்யம் தான் அடிப்படைக் கவலையாக இருந்தால் ராத்திரி 11-மணிக்குமேல் படம் காட்டவேண்டாமென்று சுகாதார மந்திரிக்கு ஆலோசனை கூறிவிட்டுச் சும்மா இருக்கலாம். படத்தின் நீளத்தைக் குறைக்கச் சொன்னால் பட முதலாளிக்கு மட்டுமா வருத்தம். நீளப்படம் பார்க்க விரும்பும் பொதுமக்களுக்கும் தான் மனஸ்தாபம். ஒழுக்கத்தைப்பற்றிக் கல்வி மந்திரி கவலை கொண்டு சினிமாப்படத்தைக் கண்காணிப்பது பொருத்தம் தான். கடவுளரைப்பற்றிக் காட்டக்கூடாது என்று கூறு மாறு ஒரு உத்திரவு போட்டால் எவ்வளவு சங்கடம் ஏற்படும். நல்லதுக்கும் சரி, பொல்லாததற்கும் சரி, சாமியைக்கூப்பிடாவிட்டால் நமக்கு ஒன்றும் வேலை ஓடாது வேலைக்கு வழி விட்டு அதை ஒழுங்கு படுத்த நுணுக்க முறைகளை செப்பனிட்டால் அதுவன்றோ நன்றாயிருக்கும். பக்தர்களுக்கும் நாத்திகருக்கும் ஏககாலத்தில் விரோதியாக நடுநிலைமை பூண்டுவிட்டால் யார் தான் ரஸிப்பார்கள்.

அனுபவஞானியின் குறிப்புகள்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தனை நாட்கள் என்று பிரயாணப் படிப்பு முடிப்பதுண்டு. வேடிக்கையாக இருக்கிறதல்லவா? பொருள் விளங்கக்கூட மாட்டேனென்கிறது நமக்கு. அவருக்குத்தான் தெரியும் அதன் பொருள்; ஏனெனில் அவர் அதன் பயனை அனுபூதியாகப் பெற்றிருப்பவர்.

வெளி நாடுகளில் சுற்றித் திரியும்போது முன் கூட்டித் திட்டமிட்டுக்கொண்டு ஆங்காங்கு செல்வார். சென்ற இடங்களில் அறிவுக்கோ வியப்புக்கோ, செய்திக்கோ பாத்திரமான சிறு சிறு விபரமும்கூட அவர் நினைவில் பதித்துக் கொள்வார். இந்தியர்களிலேயே இவர் அவ்வளவு விரிவான வெளிநாட்டுப் பிரயாணமும், அனுபவமும் படைத்தவர்கள் யாராவது இருப்பார்களாவென்பது ஐயுறத் தக்கது தான். இப்போது அவரிடம் பேசிப் பார்த்தாலும் மிக மிகச் சிறிய ஆனால் குறிப்பான விபரங்கள் தெருக்கள் சந்திகள். கடைகண்ணிகள், தொழிற் சாலைகள் பிரபலஸ்தர்கள் பற்றியவை அவர் வர்ணிக்கக் கேட்கலாம், கூர்ந்த பார்வையும் ஆழ்ந்த சிந்தனையும், நல்ல ஞாபகசக்தியும் அவருடைய மூல பலங்கள். மற்றொரு விஷயம், அவருடைய ஒரே நண்பன் அவர் கையிலிருக்கும் புகைப்படக்கருவி—காமிரா. அவர் கவனத்திற்குப் பாத்திரமாகும் ஒவ்வொரு சிறு விஷயத்தையும் கூட உடனுக்குடன் பதிவு செய்துகொள்ளும் "பாஸ்வெல்" அவருடைய அந்தக் காமிராதான்.

வெளிநாட்டிலும் இங்கும் மாந்தரின் வாழ்க்கைத்துறையில் பல்வேறு நிலைகளையும் பொறுப்புக்களையும்பற்றி அவர் செய்திருக்கும் ஆராய்ச்சிகள் விரிந்த மனோதத்துவ விளக்க நூல் ஒன்று தயாரிப்பதற்குப் போதியவை. மனோதத்துவ சம்பந்தமான தன் அனுபவக் குறிப்புக்களை நூற்றுக்கணக்கான புகைப் படங்கள்—பைல்கள்— ஆல்பங்கள் இவற்றில் நிறைத்து வைத்திருக்கிறார். பல வருஷங்களில் பலர் சேர்ந்து உழைத்தால் அந்தக் குறிப்புகளைப் பயன்படுத்தி மேலான நூல் ஒன்றை உருவாக்கக்கூடுமென்று நினைக்கிறேன். சில ஆராய்ச்சிகளை இங்கு இலேசாகக் குறிப்பிடுகிறேன் வாசகர்கள் ஓரளவேனும் அறிந்துகொள்ளும் பொருட்டாக.

"இவ்வளவு பெரிய லண்டன் மாநகரில் ஒரு தபால்காரன் எப்படி வேலைசெய்கிறான்" என்ற வியப்பும் அதைப் பரிசோதிக்கும் ஆவலும் நாயுடு அவர்களுக்கு ஏற்பட்டதாம். அதைப் புரிந்துகொள்ள அவர் ஒரு யோசனை செய்தார்.

ஜி. டி. நாயுடு லண்டன் W. C. I. என்று விலாசமிட்டு ஒரு கடிதம் அவரே எழுதித் தபாலில் போட்டுவிட்டார். என்ன ஆச்சர்யம், அவ்வளவு பெரிய நகரில் எப்படியோ அவர் விலாசத்தைத் தேடிக் கண்டுபிடித்துவிட்டான் தபால்காரன். தபால் இலாகாவைப் பொருத்தவரையிலும் இந்தியாவில்கூட மிக்க திறமை வளர்ந்து நிரூபணமாகியிருக்கிறதென்றே நம்புகிறேன். ஆனால் சில சமூக நேர்மைகளைப் பற்றி நாயுடு அவர்களின் வெளிநாட்டு அனுபவம் இந்திய மண்ணில் காணமுடியாதென்று சொல்வதில், வெட்கப்பட இடமிருந்தாலும் உண்மை என்பதை மறுக்க முடியவில்லை.

(தொடரும்)

மங்களகரமான பொங்கல் வாழ்த்துகள்!

6 வது வாரம்

சென்னையில்
மூன்று தியேட்டர்களிலும்
மற்றும் முக்கிய நகரங்களிலும்

14-1-49 தேதி முதல்
திருச்சி — வெல்லிங்டன்

மாடர்ன் தியேட்டர்ஸின்



★ ஆதித்தன் கனவு ★

T.R. மகாலிங்கம், அஞ்சலிதேவி
நடித்தது

✱

பஸ்மாசுரமோஹினி நடனம்
அன்னம்-சுடலை காமிக்
வளைசல் ஒய்யார நடிப்பு

✱

முதலிய அரிய காக்ஷிகள்
பார்க்கப்பார்க்கத் திகட்டாதவை

டைரக்ஷன் :— T. R. சுந்தரம், B. A. B. Sc. (Leeds)

மாடர்ன் தியேட்டர்ஸ் லிமிடெட் சேலம் & மதுரை.

புத்தக விமர்சனம்

தமிழா தூங்காதே!

ஆசிரியர் "நாடோடி". பிரசுரம் நாடோடி, தியாகராய நகர் சென்னை-17. விலை ரூபாய் நான்கு

தமிழ் நாட்டில் நவீன காலத்தில் 'ஹாஸ்யம்' என்ற வார்த்தை நினைவுக்கு வரும்போதெல்லாம் 'நாடோடி' என்ற பெயரும் கட்டாயம் நினைவுக்கு வரும். நவீன தமிழ் ஹாஸ்யமும், 'நாடோடி'யும் அவ்வளவு பிணைந்து போயிருக்கிறார்கள்.

'நாடோடி'யின் கதைகளையும், கட்டுரைகளையும் படித்துவிட்டு சிரிக்காத 'மிடில் கிளாஸ்' ('மத்திய வகுப்பு' அவ்வளவு ஹாஸ்யமாக இல்லையல்லவா) தமிழ் வாசகர்கள் இருக்க முடியுமானால் சூரியன் இரவிலும் காய முடியும் என்று கூறிவிடலாம்.

"அப்படி என்ன, 'நாடோடி' அவ்வளவு பெரிய ஹாஸ்ய எழுத்தாளரா, எங்கே ஒரு மாதிரி காட்டுங்கள் பார்க்கலாம், அவர் எழுத்துக்கு" என்று கேட்பவர் யாராவது இருந்தால் அவருக்கு "தமிழா தூங்காதே" என்ற புத்தகத்தில்.

தமிழன் தூங்கக் கூடாது என்ற 'கொடிய' எண்ணம் 'நாடோடி'க்கு இல்லை உண்மையில் தமிழன் தூங்கவேண்டும், நிம்மதியாகக் குறட்டை விட்டுத் தூங்கவேண்டுமென்பதே அவர் எண்ணம். இப்புத்தகத்தின் முதல் கட்டுரை இந்தக் கொள்கையை வற்புறுத்தி "தமிழா, தூங்கு" என்ற கருத்தை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளக்குகிறது. இதைப் பார்க்கும்போது "தமிழா, தூங்கு" என்று ஏன் இந்தக் கட்டுரைக்கும் புத்தகத்துக்கும் இந்தத் தலைப்பை கொடுக்கவில்லையென்று தோன்றுகிறது.

இந்தத் தொகுப்பில் "என்னுடைய உதவி", "போன் மகாத்மியம்", 'பணப் பெருமை' ஆகிய மூன்றும் மிகச் சிறந்து விளங்குகின்றன.

ஃ ஃ ஃ

'நாடோடி'யின் எழுத்துக்களில் குடும்ப வாழ்வின் உயிர்த் தொடர்பும், நகர சமூகத்தின் வாசனையும், மத்திய வகுப்பாரின் தொல்லைகளும் நிறைய இடம் பெறுகின்றன. காலத்திற்கேற்ற பொருளைக் கையாளுவதில் உள்ள லாபத்தை 'நாடோடி' நன்கு பயன்படுத்திக்கொண்டிருக்கிறார் என்றே சொல்லவேண்டும். 'ஹோட்டல் டிபன்' 'சமாதானம் வருகிறது' போன்றவை இந்த உண்மைக்கு நல்ல உதாரணங்கம்.

'நாடோடி'யின் நடை நல்ல எளிதான நடை. ஸரளமாக மிதந்து வரும் ஹாஸ்யத்தை இந்த நடைக்குள் பொருத்தி நம்மைப் புன்முறுவல் பூக்க வைக்கிறார் 'நாடோடி'.

"தமிழா தூங்காதே"யில் இருபது இனிய கட்டுரைகள் சேர்ந்திருக்கின்றன. "நாடோடி'யின் ஹாஸ்யத்துக்கு இப்புத்தகம் பதமான உதாரணம்.

ஜெ கோஷ மாலை:

வெற்றி முழக்கப் பாட்டு. ஆசிரியர் க. கி. குமாரசிவம். பதிப்பித்தோர் க ந. கந்தசாமி, கணபதி போஸ்டு, கோவை. விலை அணா நான்கு.

நம் நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டுத் தியாகங்கள் புரிந்த பெருந் தலைவர்களுக்குப் போற்றுதலாகப் பாடப்பெற்றிருக்கும் இப்பாமாலை இனிய தமிழில் வடிவமைந்திருக்கிறது. முதன் முதலில் கொடி வணக்க வெண்பா நம்மைக் கவருகிறது. 'அறங் காட்டுஞ் சக்கரந்தான், ஆய்ந்த வளம் பச்சை நிறங் காட்டும், செம்மையது நேர்ந்த மறங்காட்டும், தூவருண வெள்ளையுள்ளத் தூய்மையினைக் காட்டுமிந்த மூவருண மாண் கொடியை முன்னு" என்று அமைந்திருக்கும் இக் கொடிவணக்கம் கருத்தை அழகாகச் சித்தரிக்கிறது.

தாதாபாய், திலகர், அனிபெஸண்ட் ஆகியோருடன் ஆரம்பித்து, பொதுத் தொண்டர்கள் ஈறாக நமது தலைவர்களைப் போற்றியிருக்கிறார் ஆசியர் இத் தொகுப்பில். கப்பலோட்டிய வீரத் தமிழர் வ. உ. சி. பற்றிய விருத்தம் மிகச் சிறப்பாக அமைந்துள்ளது. பாடப் பெற்றுள்ள தலைவர் வரிசையை சிறிது ஒழுங்கு படுத்தினால் இச்சிறு நூல் சரித்திரச் சுவை கொண்ட பாமாலையாகத் திகழும் என்பதில் ஐயமில்லை.

கிடைக்கப் பெற்றோம்:

ஆர்ட்காலரி:

சென்னையில் சமீபத்தில் நடைபெற்ற 1948-49 அகில இந்திய கதர் சுதேசி, தொழிற் கண்காட்சியின் கலை உபகமிட்டி ஒரு இனிய மலர் பிரசுரித்திருக்கிறது. இம்மலரின் அட்டையை, கண்காட்சியில் மகாத்மாவின் போதனைகள் சம்மந்தமாக முதற் பரிசுபெற்ற, ஓவியம் அலங்கரிக்கிறது. கலைத்துறையில் புத்தாண்டில் அதிக ஊக்கம் பிறந்திருப்பதும், கண்காட்சியில் கலைப்பொருள்களுக்கு இரண்டாயிரம் ரூபாய்களுக்கு மேல் பரிசளிக்கப்பட்டிருப்பதும் பாராட்டுக்குரியன. இம்மலரில் பரிசு பெற்ற கலைப்பொருள்களின் சித்திரங்களும் நீதிபதி ராஜமன்னார், டாக்டர் கஸின்ஸ் ஆகியோரது கட்டுரைகளும், கலை காலரி பற்றிய விமரிசனமும் பொலிவுறுகின்றன.

சென்னை ஹோட்டல் மாகசைன்:

சென்னை ஹோட்டல் சங்கத்தின் அதிகார பூர்வமான மாதமிருமுறை, இருமொழிப் பத்திரிகை. ஆசிரியர் ஏ. ஆர். வி. ஆசார். கிடைக்குமிடம் 289, சைனு பஜார் ரஸ்தா, சென்னை.

தாம்பூலத்திற்கு
மைதீன்
புகையிலை
மேலானது
E.S. MYDEEN & Co.
இஸ்மைதீன்
TRADE MARK
KUMBAKONAM.

தந்தி விலாசம் :—'கோகுல்'
போன் நெ. 57
Estd. 1909
Branch : MANNARGUD

கும்பகோணம்
டி. எஸ். ஆர்.
கம்பெனியின்

சந்தனாதித் தைலம், கோகுல் பாக்குப்பொட்டலம், அரைக்கீரைவிதைத் தைலம், கோகுல் வத்தி தினுசுகள் இவைகளை உபயோகியுங்கள்.

கோகுல்
கூந்தல் தைலம்

☞ தைலங்கள் கூந்தலுக்கு வளர்ச்சியையும் மூளைக்கு குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்றன.

எங்கள் ஆலிலை கிருஷ்ணன் டிரேட்மார்க்கை கவனித்து வாங்குங்கள்.

சென்னை நகரத்திற்கு சோல் ஏஜண்டுகள் :—
புஷ்பவனம் ஸ்டோர்ஸ், திருவல்லிக்கேணி, சென்னை.
கோவை ஏஜண்டு :—
B. பாலபட்டாபி செட்டியார்,
246, வைசியாள்தெரு, கோயம்புத்தூர்.

மைசூர் கவர்ன்மெண்ட் தயாரிப்பு

பட விமரிசனம் "மந்தஹாஸன்"

கிருஷ்ணபக்தி

தயாரிப்பு— கிருஷ்ண பிக்சர்ஸ்
டைரக்ஷன்—ஆர். எஸ். மணி.
ஸ்டூடியோ—நியூடோன்
வசனம்—யோகியார், பாஷ்யம், சுத்தானந்தர்,
கு. ப. சேது அம்மாள்
நடிகர்கள்—பி. யு. சின்னப்பா, டி. ஆர். ராஜகுமாரி, ஏ. ஆர். சகுந்தலா, எம். எல். வசந்தகுமாரி, என். எஸ். கிருஷ்ணன், டி. ஏ. மதுரம், பி. ஏ. பெரிய நாயகி முதலியோர்

பொதுஜன அபிப்ராயம் என்பது ஒரு மாயச்சரக்கு இதை வைத்து வியாபாரம் செய்வோர் அரசியல் வாதிகள். இதன் கீழ்த்தரமான நிலைகளுடன் போராடுவோர் சீர்திருத்தக்காரர்கள். இவற்றைப் பிரதிபலிப்போர் கலைஞர்கள். பொதுஜன அபிப்ராயம் என்ற ஒன்றை உருவாக்குவோர் மேதைகள்.

இத்தனை பேரும் சலாகை வீசி விளையாடும் மேடை கண்முன் விரிந்து கிடக்கும் சமூக வாழ்வுதான். இவர்கள் அனைவரின் கூட்டு முயற்சியால்தான் ஒரு நாடு வளர்ச்சியுறவேண்டும். ஒவ்வொன்றிலும் அளவு தீங்கும் நன்மையும் கலந்தேயிருக்கிறது.

தமிழ்ப்படக்கலையில் பொதுஜன அபிப்ராயத்தை அனுதாபத்துடன் கவனித்து, பலஹீனமான உனர்ச்சிகளுக்கு இரங்கி, அவர்களைக்கவர்ந்து உயர்ந்த ரஸனைக்கு அவர்களைத் தயாரிக்கும் வேலை பெரும்பாலும் நடைபெறுவதில்லை. அப்படி உண்மையான கவலையுடனும் சிரத்தையுடனும் பொதுஜன அபிப்ராயத்தைக் கணித்தறிந்து, தொழில் லாபமும் கெடாமல் உணர்ச்சி மேன்மையும் குன்றாமல் ஒரு படத்தை உருவாக்கும் தேனீ போன்ற இடைவிடாத செயல் திறன்படைத்த ஒருசில டைரக்டர்களில் ஆர். எஸ். மணி ஒருவர்

புராணக்கதை ஒன்றைத் தேர்ந்தெடுத்தது பொதுஜனங்களின் பலஹீனத்தை அவர் உணர்ந்து அவர்களை அணுகும் சரியான வழியைத் தெரிந்து கொண்டிருப்பதைக் காட்டுகிறது. ஆனால் அவர்களைத் திருப்தி செய்து விடுவதென்ற இலேசான காரியத்தில் மட்டும் இறங்கி விடாமல் ஆஷாடபூதி பக்த சிகாமணிகளின் வாழ்க்கையின் பயங்கர விளைவுகளைச் சித்தரித்து உயர்ந்த பக்தியின் பான்மையை உணர்த்தும் கலைப் பொக்கிஷமாக "கிருஷ்ண பக்தியை"க் கொண்டுவருவதில் அவர் அளவற்ற உழைப்பை ஈடுபடுத்தியிருக்கிறார். இத்தனைக்கும் பொறுமையுடன் ஆதரவு தந்து காத்திருந்த கிருஷ்ண பிக்சர்ஸ் உடைமையாளர் பாராட்டுக்குரியவர்தான்.

படத்தின் நீளம் பொறுமையைச் சோதித்து விடுகிறது என்றாலும் எழுந்துபோய்விட முடியவில்லை.

கதை

கிருஷ்ண பக்தி நிரம்பியவன் போல பாசாங்கு பண்ணும் பாகவத சிகாமணி ஒருவனுடைய உடங்யாசத்தின் விளைவாக அரண்மனை தாசிமகள் ஒருத்தி உண்மையாகவே பக்தி மார்க்கத்தில் ஈடுபடுகிறாள். அவளுடைய பக்தி பேதமையை முதலீடு செய்து அவளை அடைந்து இன்புறப் பாகவதன் சூழ்ச்சி செய்கிறான். அரசனும் அவள்மீது மையல் கொள்ளுகிறான். பாகவத உபங்யாசத்தின் விளைவாக அரசனின் காதலை பொய்யானதிலையான தல்லவென்று ஒதுக்கித் தள்ளிவிட்டு பாகவதனை மெய்யான குருவென்று நம்பி அவனடிகீழ் அடிமை பூண்டொழுகுகிறாள் தாசிமகள். சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திப் பாகவதன் அவளைத்துராக்ரமம் செய்ய முயலும் போது கண்ணன் அவளைக் காப்பாற்றுகிறான். அதேசமயத்தில் பாகவதன் உள்ளத்தில் இறைவன் அருளால் ஆத்ம விசாரமும் கழிவிரக்கமும் தோன்றி அவன் திருந்துகிறான். ஆயினும் முன் செய்தபாவங்களின் பலனை இருந்து அனுபவித்துத் தேறுகிறான். இதுதான் கதையின் நடுக்கருத்து.

நடிப்பு

பி. யு. சின்னப்பாவும், ராஜகுமாரியும் பாகவதன்-தாசிமகள் பாத்திரங்களாக வருகிறார்கள். போலிப் பாகவதனாகவும்—மெய்யன்பனாகவும் பி. யு. சின்னப்பா உணர்ந்து நடிக்கிறார். ராஜகுமாரியின் அனாவசியமான அங்கப்பூரிப்பை ஆங்காங்கு அடக்குமுறைக்கு ஆளாக்க டைரக்டர் அரும்பாடுபட்டிருக்க வேண்டுமென்று தெரிகிறது. நடிப்பு உணர்ச்சி மிக்கதாய் இருக்கிறது. ருக்மணியாக வரும் சகுந்தலா அந்தப்பாத்திரத்தின் அடக்கமும் மேதையும் தோன்ற நடிக்கவில்லை. அவளைப் பாமையாக நடிக்கச்செய்திருக்கலாம். பாமையாக வரும் பெரியநாயகியின் பாட்டும் நடிப்பும் நல்ல மிடுக்குடன் இருக்கிறது. ருக்மணி பாத்திரமாக பெரியநாயகியை மாற்றியிருந்தால் சோபித்திருக்கலாம்.

டெக்னிக்

உணர்ச்சிகளையும் சம்பவமுன்னேட்டங்களையும் உருவகப்படுத்திக் காட்டும் சிம்பாலிக் சித்திரங்கள் அருமையாக இயற்றப்பட்டிருக்கின்றன. பாகவதனுடைய ஆன்மா அவனுடன் பேசும் தற்போத உணர்வுக்காட்சி மெய்சிலிர்க்கச் செய்கிறது. பாகவதன் கரங்களில் பெண்பாவை சிக்குவதைப் பாம்பின் வாய்த்தேரையாகக் காட்டியிருக்கும் போது நடுக்கமே உண்டாகிறது. காட்சிகள் துல்லியமாகவும் ஒலிப்பதிவுகள் கணீரென்றும் விளங்குகிறது. ஜோடனைகள் அருமையாக இருக்கின்றன.

வசனம்

யோகியார், பாஷ்யம், சுத்தானந்தர், கு. ப. சேது அம்மாள் ஆகிய நால்வர் வசனம் எழுதியிருக்கிறார்கள். வசனங்களில் ஆங்காங்கு பொருத்தமான சந்தர்ப்பங்களுக்கு ஏற்ற ஆசிரியர்களின் எழுத்தைப் பயன் படுத்திய டைரக்டர் இங்கு மிகச் சிறந்த பத்திரிகாசிரியரின் திறமையை நிரூபிக்கிறார். ரஸபேதமின்றி இத்தனை பேருடைய வசனங்களையும் பொருத்தியிருப்பது படத்தின் உயிர் ஓட்டமாக இருக்கிறது.

ஹாஸ்யம்

தமிழ்ப்பட ஹாஸ்யம் எவ்வளவு மட்ட ரகமாகப் போய்விட்டபோதிலும் குப்பையில் மாணிக்கம் கிடைக்கத்தான் செய்கிறது. என். எஸ். கிருஷ்ணன் ஹாஸ்ய முத்திரை படத்தின் சம்பவ நெருக்கங்களால் ஏற்படும் அயர்வைப் போக்கி சிந்தனைக்குச் சவுக்கு வீசுகிறது. வீடெல்லாம் பெண்குழந்தைகள் பேயிகள், குமரிகள், கிழவிகள் நாட்டியத்தின் பெயரால் பேயாட்டம் ஆடிப் பித்தேறித் திரிவதன் பயங்கர விளைவை அற்புதமாகச் சித்தரிக்கிறார். படம் பார்த்துவிட்டு வீட்டுக்குச் செல்லும் எந்தத் தந்தையிடமும் நாட்டிய வாத்தியார்கள் சற்று எச்சரிக்கையாயிருத்தல் அவசியம். நன்றாகவேண்டும். பின்னே 7 வயதுக்குழந்தைக்கு, காதலையும் கத்தரிக்காயையும் பாவனை செய்யவும் மேனிகுலுக்கவும் கற்றுக் கொடுப்பது கலையா, இதயக் கொலையா என்று கேட்கத்தான் தோன்றுகிறது. கலைவாணரின் திறமையும் கலைஉள்ளமும் மகோன்னதமாக ஒளிவீசுகிறது.

இந்த விமர்சனம் வெளியாகும் போது தமிழ் நாடெங்கும் மக்கள் கிருஷ்ண பக்தியைப் பார்த்துக் கொண்டிருப்பார்கள்.

திருச்சி சப்கோர்ட்டு.

O. S 189/48

காமாக்ஷி அம்மாள் —வாதி
ஆறுமுகம் பிள்ளை வகையரு —பிரதிவாதிகள்

ஷை நம்பரில் வாதி முசிரி தாலூகா பாலகிருஷ்ணம்பட்டி மஜரா மேட்டூரிலிருக்கும் ஆறுமுகம் பிள்ளை 1. காமாக்ஷி அம்மாள் 2. சுப்பிரமணிய பிள்ளை 3. இவர்கள் பேரில் பிரூதில்கண்டதில சுவாதீனத்துக்கு தாவா செய்து ஷை நம்பர் 25—1—49 விசாரணை கெடு ஏற்பட்டிருக்கிறது. அன்று பிரதிவாதிகள் ஆஜராகி தங்கள் எதிர் வாதங்களைத் தெரிவித்துக் கொள்ள வேண்டியது. இல்லாவிட்டால் ஷை நம்பரில் Exparte ஆகதீர்ப்ப செய்யப்படும்.

R. S. Srinivasachari,
Advocate.
6—1—49

கரூர் டி. மு. கோர்ட்டு

O. S. 167/1948

முகம்மது இபுராஹிம் ராவுத்தர் —வாதி
உம்சல்மா பீவி —பிரதிவாதி

ஈட்டுப்பத்திரப்படி வாதிக்கு பிரதிவாதியால் ரூ. 49—3—0-ம் பின் வட்டியும் செலவும் கிடைக்க வேணுமாய் செய்திருக்கும் தாவா 28—1—49 தேதி வாயிதா ஏற்பட்டிருப்பதால் ஷை தேதியில் கோர்ட்டில் ஆஜராகி ஆக்ஷேபணையைத் தெரிவித்துக் கொள்ளாதபக்ஷத்தில் ஒரு கக்ஷியாக தீர்மானிக்கப்படும்.

கரூர் 10-1-49 } K. ராஜகோபால அய்யங்கார், வாதி வக்கீல்.

விற்பனை

விலை குறைக்கப்பட்டிருக்கிறது. இட்டாலி ஸில்கினால் கைத்தறிகளில் தயார் செய்த 46" × 6 கெஜம் பிளேன் சாரி ஒன்றுக்கு ரூ. 11. 46" × 6 கெஜம் பேட்டு சாரி ஒன்றுக்கு ரூபாய் 15. மேலும் ஷர்ட்டிங், ஸாரம் துப்பட்டா முதலிய தினுசுகளும் எங்களிடம் கிடைக்கும். தேவைக்கு:

THE KUMARAN TEXTILES HOUSE,
KOTTAR. (S. Travancore.)

சிறு கதை

பட்டகாலிலே

“ரா. பட்டு”

விடிய இரண்டு நாழி இருக்கும். வேலன் தோளில் சாத்திய கலப்பையுடன் ஒரு ஜதை எருதுகளை ஓட்டிக்கொண்டு வயலுக்குச் சென்றுகொண்டிருந்தான். எருதுகள் இரண்டும் முன்னால் சென்றன. வேலன் முகத்தில் ஒரு தனி களை விளங்கிக்கொண்டிருந்தது. அவனுடைய முகக்களையிலிருந்தே மனம் மாசு மறுவற்றிருந்தது என்பது தெரிந்தது அவனுடைய ஒரே நோக்கம் அந்த இரண்டு எருதுகளைக் கொண்டு அன்றைக்குள் இரண்டு குழி நிலமாவது உழ வேண்டும். என்பது தான். அதிகாலையில் எழுந்து வேலைக்குப் போவதும், அந்தி மயங்கும் நேரத்தில் வீட்டுக்கு வருவதும் தான் அவன் தனது வேலையாகக் கருதினான். வேறு ஒன்றும் அவனுக்குத் தெரியாது. அவன் தனது முப்பதாவது வயது வரை அறிந்தது இது தான்.

வேலன் தன் நிலத்தை அடைவதற்கும், கீழ்வானம் வெளுப்பதற்கும சரியாக விருந்தது. இன்னும் சிறிது நேரத்தில் ஆதவன் கிரணங்களுடன். கிழக்கில் தோன்றி விடுவானென்பதற்கு முகமன் கூறுவது போல் அது இருந்தது. வேலனும் எருதுகளை ஏரில் பூட்டி உழ ஆரம்பித்தான். புது நிலத்தை திருத்தம் செய்வதில் முனைந்து கொண்டிருந்தான். இன்றைக்கு அவன் தனக்குச் சொந்தமெனக் கூறும் நிலம் அரை ஏக்கராதான். அவன் வாழ்வும், தாழ்வும் அந்த நிலம்தான். உண்டிக்கும் உடைக்கும் போதுமான அளவு அந்த நிலத்தில் கிடைக்கவில்லை. என்றாலும், ஒருவாறு அவன் திருப்திப்பட்டு வந்தான். இன்னும் கொஞ்சம் நிலம் இருந்தால் தேவலை......என்று அவன் மனத்தின் ஒரு மூலையில் சிறிது ஆசை தோன்றும்படி செய்தவள் அவன் மனைவி பொன்னிதான்.

எப்படியோ அவ்வூர் கணக்கப்பிள்ளை கணபதி ஐயரைக் கேட்டு பக்கத்திலுள்ள கால் ஏக்கரா நிலத்தையும் தன் பேருக்கு அடமானம் செய்து கொண்டான். இது வாய்மொழி அடமானம் தான்.

மேற்கூறிய தரிசு நிலத்தை திருத்துவதில் தான் வேலன் இன்று மும்மரமாக ஈடு பட்டிருந்தான். எருதுகளை வைத்துக்கொண்டு எவ்வளவு நிலம் ஓட்ட முடியும்? ஒரு குழி உழுது விட்டு அவன் மேலே பார்த்தபொழுது சூரியன் உச்சிக்கு வந்துவிட்டான். மாடுகளும் அசந்து விட்டன. இனி நடக்காது. சாதாரணமாக அந்நேரத்திற்கு கூழ் எடுத்து வரும் பொன்னியும் அந்நேரத்திற்கு இன்னமும் வரவில்லை. வேலனுக்கோ பசி அதிகம். காதை அடைத்தது. ஏரை அவிழ்த்து மாடுகளை மேய விட்டு விட்டு மரத்தடியில் உட்கார்ந்திருந்தான். சற்று படுக்கலாம் என்று அப்படியே சாய்ந்தவனை நித்திராதேவி அணைத்துக் கொண்டாள்.

“மச்சான், மச்சான்” என்று பொன்னி எழுப்பினாள். திடுக்கிட்டு எழுந்தான் வேலன்.

“என்ன மச்சான், மாடுங்க பாட்டுக்குப் படுத்து கிடக்குது. நீ பாட்டுக்கும் மரத்தடியிலே படுத்து நல்லா தூங்கறே” என்றாள் அவள்.

எழுந்து ஓடையில் முகங்கழுவிக்கொண்டு சாப்பிட வந்தான் வேலன். சாதத்தை தன்கையால் எடுத்துப் போட்டுக்கொண்டே ‘என்ன மச்சான்! மேலெக்கியாச்சும் புது வேட்டி வாங்கிக் கட்டிக்க மாட்டயா?’ என்றாள் பொன்னி.

“நீ ஏன் பொன்னி கவலைப் படரே? இந்தா! எனக்கு ஒரு நாலு முழ வேட்டி ஒன்னு இருந்திச்சின்னா ஒரு வருஷம் ஓட்டிப்புடுவேன். ஒனக்குச் சொல்லு. இந்த வருஷமாச்சும் ஒரு சேலை எடுத்துக் குடுத்துட்டேண்ணா, என் கவலை தீர்ந்தது.”

“மச்சான், மச்சான் ஒண்ணு சொல்ல மறந்துட்டேனே. நம்ம கணக்கப் புள்ளே ஐயா ஒன்னைக் கூட்டியாரச் சொல்லி ஒரு ஆளு வந்திச்சு. நான் இல்லேண்ணேன். வந்தா வரச் சொல்லுன்னுட்டு போச்சு” என்றாள் பொன்னி.

“ஆமாம் பொன்னி. போவணும். அவருக்கு ஒரு அஞ்சு ரூவா தர்ரேன்னேன். அண்ணிக்கொருநாள் கேட்டாரு.” என்ன பணம் குடுக்கறியா, மாத்திப்புடட்டுமா“ என்னாரு.” சாமி! கொஞ்சம் தாங்கிக்குங்க குடுத்துடரேன்னுட்டு சொல்லிப்புட்டு வந்தேன்”

“ஏன் மச்சான்! நமக்கு கடவுள் நல்ல வழி உடமாட்டாரா? எண்ணிக்கும் இப்படியேதான் இருப்பமா?”

என்று கூறிய பொன்னி “மச்சான், மச்சான் எங்கே ஒரு மாட்டைக் காணும்” என்று கத்தினாள்.

வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்த வேலனை ஓடையில் தண்ணீர் குடித்துவிட்டு “இரு பொன்னி போய்ப்பாத்துட்டு வரேன்” என்று கூறி விட்டுச் சென்றான்.

புதருக்கப்பால் மேய்ந்து கொண்டிருந்த மாட்டைப் பிடித்துக்கொண்டு வந்த வேலன் மறுபடியும் ஏரைப்பூட்டி உழ ஆரம்பித்தான். தன் ஏழ்மையை நினைந்து கொண்டே. கணவன் உழுவதைக் கண் கொட்டாது பார்த்துக் கொண்டிருந்தாள் பொன்னி. ஏரை ஓட்டிய வேலன் கலப்பை எதன் மீதோ டக்கென்று மோதியதைத் கேட்டு ஏரை நிறுத்தி தார் தடியால் அந்த இடத்தை நோண்டினான். பித்தளையால் செய்யப்பட்ட ஒரு சிறு பெட்டி தென்பட்டது.

“பொன்னி, பொன்னி” என்று ஆச்சரியத்தால் கூவினான் வேலன்.

“என்ன எள்ன?” என்று கேட்டுக்கொண்டே ஓடி வந்தாள் பொன்னி.

“தோ! இதைப்பாத்தியா? இதுக்குள்ளெ என்ன இருக்குதோ, கனமாயிருக்குது. வா பார்ப்போம்” என்று கூறி சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு இருவரும் மரத்தடிக்குச் சென்று பெட்டியைத் திறந்தனர். அதற்குள் அழகான இரு பைகள் இருந்தன. அவைகளைத் திறந்தவுடன் ரூபாய்கள் கல கலவென்றன. இருவரும் எண்ணினர். வெள்ளி ரூபாய்களாக இருநூறு இருந்தது. ‘பொன்னி இதை அப்படியே இந்தத் துணியில் மறைத்து வை. போகும் போது எடுத்துப் போகலாம்” என்று கூறிவிட்டு, ஆண்டவன் கருணையை வாயாரப் புகழ்ந்து கொண்டே விட்டதைத் தொடர்ந்து ஏரை ஓட்டினான் வேலன்.

சாயந்திரம் வீடு சென்ற வேலனுக்கு சந்தோஷம் நிலைகொள்ளவில்லை. “நல்லதாக ஒரு ஜோடி மாடு வாங்கலாம்”, “பொன்னிக்கு சேலை வாங்கலாம்”. இப்படி எண்ணியது அவன் மனம்.

சாப்பிட்டதும் கை அலம்பியதும் அலம்பாததுமாக பொன்னி! அஞ்சு ரூவா குடு. ஐயா கிட்டெக் குடுத்துட்டு வர்ரேன், என்றான் வேலன்.

“மொத மொத சாமிக்கு வச்சிட்டில்லெ மத்த காரியம் பாக்கணும் மச்சான். அவரு மனசு வச்யில்லெ நமக்கு இதைக் கொடுத்தாரு” என்றாள் பொன்னி.

“இல்லெ பொன்னி! இப்ப இது கிடெச்சுது ஐயா குடுத்த நெலத்துலெதானே பொன்னி. போவாட்டி ஐயா கோவிச்சுக்குவாரு. அன்னிக்கே வேறொருத்தனுக்கு பட்டா தந்துடட்டுமான்னாரு. இன்னிக்கு ஆளனுப்பிச்சாரு. இதும் பூட்டுதுன்னா நாம்ப ஏதை உழுவாது பொன்னி. நீ எடுத்துக்கிட்டு வா’ என்றான்

பதில் பேசியறியாத அவள் அந்தப் பெட்டியைத் திறந்து சுவாமியை நினைத்துக்கொண்டே ஐந்து ரூபாய் எடுத்து வந்து கணவனிடம் தந்தாள். அதைப் பெற்றுக் கொண்ட வேலன் “பொன்னி கதவை மூடிக்கோ போயிட்டு வந்துடரேன்” என்று நடந்தான்.

வெளியே கும்பிருட்டு. மழை சின்னேரத்தில் வந்து விடும் என்பதை இடியும், மின்னலும் எடுத்துக் காட்டின. இருந்தாலும் அதையும் பொருட்படுத்தாது நடந்தான் வேலன்.

“சீக்கிரமா வந்துடு” என்று பொன்னி கூறியது வீதியில் நடந்த அவன் காதுகளுக்கு லேசாகத்தான் கேட்டது.

அக்கிரஹாரத்துத் திருப்பம். அவ்விடம் தான் ஊரின் சிவன் கோயில் இருந்தது. அது புராதனமானதால் சிறிது முன்புறம் பாழடைந்திருந்தது. வாயிற்படிக்கு முன்நின்று மகாதேவனை மனதார தரிசித்து விட்டு மேலே ஓர் அடி எடுத்து வைத்தான். “சுரீர்” என்றது. அப்படியே காலைப்பிடித்துக் கொண்டு உட்கார்ந்து விட்டான் வேலன். பளிச்சென்று ஒரு மின்னல். அவ்வெளிச்சத்தில் ஓர் நாகம் படத்துடன் பாய்ந்து சென்றது அவன் கண்ணில் பட்டது.

“பொன்னி, பொன்னி” என்று அலறிக்கொண்டே வாயிற்படியில் வந்து விழுந்தான் வேலன். அவன் மடியிலிருந்த ரூபாய்கள் ஐந்தும் ஐந்து பக்கம் ஓடின.

“என்ன ? என்ன மச்சான்?” என்று பதறியபடி எழுந்து ஓடி வந்தாள் பொன்னி.

வேலனால் பேச முடியவில்லை. வாயில் நுரை தள்ளிற்று.

கண்கள் மிரள மிரள விழித்தன. வாயில் நுரை தள்ளியது நிற்கவில்லை.

“பொன்னி, பாம்பு” என்று அவன் வாய் முண முணத்தது. ‘ஆ........!’ என்று வாய் விட்டு அலறினாள் அவள். வானம் இடித்தது. மின்னல் பளிச்சென மின்னிற்று. மழையும் சோவெனப் பெய்தது. எங்கிருந்தோ ஒரு பேய்க் காற்று அடித்தது. காற்றிலிருந்து தப்ப முயன்ற விளக்கு பட்டென்று அணைந்தது இதே சமயம் “பொன்னி” என்ற சப்தத்துடன் வேலனின் தலை அவள் மடியிலிருந்து தரையில் உருண்டது.

பொன்னி சொன்னதுபோல் ஒருவேளை முதல் முதல் சாமிக்கு வைக்காத குற்றமோ என்னமோ? யார் கண்டது?

TRADE MARK
GVR
“குவாலிடி காப்பி”
திருச்சி.

ரேகை சாஸ்த்திரம்

"சிவதாஸன்"

சூரிய மேடும் குணங்களும்

சென்ற வாரத்தில் சனி மேட்டின் குணங்களைப்பற்றி கவனித்தோம். சனிமேட்டில் காணப்படும் குறிகளைப்பற்றி அதிகம் சொல்வதற்கில்லை. சனிமேட்டில் ஒரு சிறு ரேகை அல்லது இரண்டு ரேகைகள் மேல்நோக்கி அதாவது அங்குலாஸ்தியை நோக்கி, கடைசிவரை போகாமல் இருந்தால் மிகவும் நல்லது. இவைகள் வாழ்க்கையின் பகுதியில் விசேடமான நல்ல பலன்களை கொடுக்கும். விதிரேகைக்கு துணை ரேகையாக பிரகாசிக்கும். இதைத்தவிர மற்ற எந்த விதமான குறிகளும் அவ்வாறு நல்ல பலன்களை கொடுக்கக்கூடியதல்ல. சனிமேட்டில் ஒரு நட்சத்திர குறி இருப்பது மிகவும் கெடுதலானது. இவர்களின் இருதய, புத்தி ரேகைகள் நன்ருக அமயாமலிருந்தால் மிகவும்மூர்க்கத் தன்மையும், பிறரை கொலைகள்கூட செய்யக்கூடியவர்களாக இருப்பார்கள். ரேகை சாஸ்திர நிபுணரான "சீரோ" என்பவர் இந்த குறியைப்பற்றி எழுதும்பொழுது கூறுகிருர், "இந்த குறியுள்ளவர்களைப் பார்ப்பதற்கே மிகவும் பயங்கரமாக இருக்கும். இவர்களுடைய வாழ்க்கை மிகவும் பயங்கரமானதாக முடியும். ஆனலும் இவருடைய பெயர் பல ஜனங்களால் அடிக்கடிசொல்லப்படும்." இரண்டு சிறு ரேகைகள் கிராசாக அமைந்திருந்தால் இதுவும் கெட்ட குறியே. இவர்களின் வாழ்க்கையும் பயங்கரமாக முடியும். இவர்களுக்கு விதி ரேகை நன்கு அமைந்திருந்தால் 'தலைக்குவந்தது தலைப்பாகையோடு போனது' என்பதுபோல எவ்வளவு மேன்மையான நிலையில் இருந்தாலும் முற்றிலும் மாறுதலைக் கொடுக்கும். இது ஆயுள் ரேகை பலத்தை ஒட்டி இருக்கிறது. சதுரம் காணப்பட்டால் ஆபத்துகள்வந்தாலும், நீங்கிவிடும் என்பதை காட்டுகிறது. தீவுக்குறி காணப்படுவதும் நல்லதல்ல. இது எந்த இடத்தில் காணப்பட்டாலும் அந்த கிரகத்தின் நல்ல குணங்களைபலவீனப்படுத்திவிடும். முக்கோணக் குறி சாதாரணமாக காணப்படுவது, மற்றரேகைகளினுல் அமையாமல் தனியாக அமைவதுதான் பலன் அதிகம் தரும். இது நல்ல குணங்களை வெளிப்படுத்தும். சாஸ்திரம், ஜோஸ்யம் முதலியவைகளில் இவர்கள் ஈடுபடுவார்கள்.

அடுத்ததாக அமைந்திருப்பது சூரியமேடு. இது மோதிர விரலுக்கடியில் அமைந்திருக்கிறது. உலகம் முழுவதும் சூரியனின் அருளால்தான் நடக்கிறது. அது போல் வாழ்க்கைக்கு பிரகாசம் கொடுப்பதும் சூரிய மேடும், அதன் ரேகையான சூரிய ரேகை அல்லது தன ரேகை. சனி மேடு உச்சமாக அமையப்பெற்றிருப் போருக்கும் மலையும் மடுவும் போன்ற வித்தியாசத்தை காணலாம். சூரிய மேடு நன்கு அமயப்பெற்றிருப் போர்கள் நல்ல கட்டு மஸ்தான சரீரத்துடன் இருப்பார்கள். ஒவ்வொரு அங்கமும் பொருத்தமாக இருக்கும். இது ஒரு முக்கியமான அடையாளம். முகம் அழகாகவும் தலை மயிர் சுருண்டும் இருக்கும். பெண்களுக்கு சூரிய மேடு நன்கு அமைந்திருந்தால் அழகை வர்ணிக்க வேண்டும். அப்படி விளங்குவார்கள். எப்பொழுதும் சிரிப்பும், வேடிக்கையும் காணலாம் இவர்களிடம். உலக சுகத்தில் ஈடுபடுவதற்கு மிகவும் ஆசை கொண்டவர்கள். ஆடை ஆபரணங்கள் அணிவதிலும், ஆடம்பரமாக செல்வதிலும் பிரியப்படுகிறவர்கள். தாராள மனப்பான்மையும் உண்டு. தன்னுடைய குற்றங்களை ஒப்புக் கொள்வார்கள். பிறருக்கு கீழ்படியும் தன்மை கிடையாது. கஷ்டம் வந்த காலத்திலும் பிறரை சீக்கிரத்தில் உதவிக்கு நாடமாட்டார்கள். கர்வமும், தனக்கு ஈடு இல்லை என்ற கெடுதலான குணங்களும் உண்டு. அழகான காட்சிகளை பார்ப்பது அவைகளைப் பற்றிப் படிப்பது இவர்களுக்கு மிகவும் ஆசை. சித்ரம் எழுதுவதிலும் சங்கீதப் பயிற்சியிலும்சிறந்துவிளங்குவார்கள். சூரியமேடு நன்கு அமையப் பெற்றிருப்பது மிகவும் பாக்யம் பெற்றிருக்கவேண்டும். இவர்களுக்கு காலக்கிரமத்தில், செல்வமும், புகழும், கீர்த்தியும் தானகவே வரும். பரம்பரையாக பணக்காரராக இருந்தவர்கள் சிலர் காலச்சக்ரத்தின் சுழலில் ஏழையாக போவதை பார்க்கிரும். அந்த ஏழ்மை நிலைமையிலும், தாராளமான மனப்பான்மையும், விசாலமானநோக்கமும் சிலரிடம் காணலாம். அது சூரிய மேட்டின் குணம்.

இவர்களுக்கு நோய்களைப் பற்றியும் சொல்ல வேண்டும், அதிகம் உலக சுகத்தில் ஈடுபடுவதால் இவர்களின் கண்பார்வை பின் வாழ்கையில் மிகவும் பாதிக்கப்படும்.

சூரிய மேட்டின் குறிகளில் ஒன்று, இரண்டைத்தவிர மற்ற எல்லாம் நல்ல பலன்களையே தரும். ஒருகையில் காணப்படும் விசேடக்குறியில் முக்கியமானது சூரிய மேட்டில் நட்சத்திரம் இருப்பது. அருள் உடையோர்க்கே இவ்விதம் இருக்கும்.



1. புள்ளி. (கருப்பு. வெளுப்பு)
2. வட்டம் 3 தீவு. 4. சதுரம்
5. முக்கோணம். 6 தாமரை
7. நட்சத்திரம் 8. வலை.
9 திரிசூலம் 10. சூலம்
11. அருள்குறி 12. குடை.

ஒரு ரேகையும் அதன் மேல் நட்சத்திரமும் காணப்படுவது மிகவும் அபூர்வம் ஒருவர் கையில் இவ்வாறு சூரிய மேட்டில் இருந்தால் தன்னுடைய வாழ்நாளில் திரண்ட செல்வமும் அழியா புகழும் பெருவார்கள். உத்தியோகத்தில் இருந்தால் படிபடியாக வெகு சீக்கிரத்தில் உயர்ந்த பதவிகளுக்கு வருவார். ஒருவர் கையில் இம்மாதிரி இருப்பதை கண்டேன் இவருக்கு வயது-28 தற்சமயம் இவர் M. A. பட்டமும் பெற்று இதற்குள் கவர்மெண்ட் பதவியில் "கெஜடட்" ஆபீசராக இருக்கிருர். சம்பளம் சுமார் 400 (வாங்குகிருர். ரேகை இல்லாமல் நட்சந்திரம் மட்டும் காணப்பட்டால் பின் பகுதியில் திரண்ட செல்வம் வரும் என்பது இவர்களுக்கு லாட்டரி, அல்லது வேறு பகுத்தறிவு போட்டிகளிலும், திடீரென்று செல்வம் வரும் இங்கு ஒரு குறிப்பு என்னவென்ருல் நட்சத்திரக்குறி சூரிய மேட்டில் இருப்பதற்கும் சனி மேட்டில் காணப்படுவதற்கும் உள்ள வித்தியாசத்தை கவனிக்க வேண்டும். முக்கோணக்குறி இருந்தால் சாஸ்திர ஆராய்ச்சிகளில் ஈடுபடுவார்கள். நல்ல கீர்த்தியைப் பெருவார்கள். சதுரக்குறி இருந்தால் செல்வத்திலும் நிதான புத்தியை காட்டுகிறது.

உலகத்தில் மிகவும் முக்கிய மனிதர் ஹென்ரி போர்ட். அவர்கள் கையிலும், நட்சத்திர குறி இருப்பதாக கூறப்படுகிறது. இவருடைய கீர்த்தியும், செல்வமும் நாம் அறிந்ததே. இம்மாதிரி ரேகைக்குறி காணப்பட்டால் இவர்கள் உத்தியோகத்திலே, மிகவும் உயர்ந்த பதவிகளுக்கு வந்து திரண்ட செல்வத்தை அடைக்கிருர்கள்.

நிற்க, நல்லோருக்கு நல்லவராகவும், தீயோருக்கு தீயவராக இருப்பதும், மிகவும் உற்சாகமாக விளங்குவதும், வியாபாரத்தில் கீர்த்தியைப் பெருவதும் புதனின் விசேடங்கள். இதைப்பற்றி (அடுத்தவாரம் காண்க.

— சிவதாசன்.

✱

வயிற்றுக் கோளாறுகளை ஆப்ரேஷன் இல்லாமல் சுகப் படுத்தக் கூடியது. சிறந்த
முப்பு சூரணம்
இந்த சூரணம் 30 வருஷ காலமாய் அனுபோகமுள்ளது. பத்தியம் கிடையாது. முப்புவினுல் தயாரிப்பு. வயற்றுப்புண் அஜீரணம் மல சிக்கல், வயற்று குமட்டல், வாந்தி, மயக்கம், சாப்பிடுவதற்கு முன்னும் பின்னும் வரும் வயறு நோவுதல் குடல் கொந்தளிப்பு மேக சம்மந்தமான வியாதிகளையும் போக்கும்.
4 அவுன்ஸ் பாட்டில் 1-க்கு விலை ரு. 3.
-(தபால் சிலவு தனி)-
Dr. R. P. சாரதி,
மகாத்மா காந்தி
சித்த வைத்யசாலை
ராமராஜா கோயில் தெரு,
சிந்தாதிரிப்பேட்டை, மதருஸ்

சலவைக்கு சிறந்த சோப்
J. 101
பலர் உபயோகித்து சிறந்த பலனை கண்டார்கள்
வெள்ளை, நீலம் — இந்த நிறங்களில் செய்யப்படுகின்றன
ஒவ்வொரு வீட்டிலும் தினகால உபயோகத்திற்கு அவசியம் வேண்டியது.
J. 101-பார் சோப்புகள்
வியாபாரிகளுக்கு தனி சலுகை உண்டு. விவரங்களுக்கு எழுதவும்.
ஜோதி சோப் ஒர்க்ஸ்
கரூர்.
J. 101 மார்க் பார்த்து வாங்கவும்.

டோங்ரேயின் —
பாலாம்ருதம்
குழந்தைகளுக்கு
பிரசித்திபெற்ற டானிக்

சூதகத்தை நிறுத்தியது.
குமரி (Tablets) சூதகக் கோளாறுகளை எந்த நிலையிலும் சிறந்த வல்லது. நிலைமை விளைவிக்காமல் கஷ்ட நிவர்த்தியளிக்கிறது. ஆயிரக்கணக்கானவர்கள் திருப்தியடைந்திருக்கின்றனர். விலை ரு. 3 நாட்பட்ட கோளாறுக்கு விலை ரு. 5 மிக்க கடுமையான கோளாறுக்கு ரு. 8 கர்ப்பத் தடை மாத்திரைகள் (Tablets) 6 மாத உபயோகத்திற்கு விலை ரு. 4

(வி. பி. க்கு 12 அணா அதிகம்.)
Mrs. P. DEVEE. F.D.S. (S)
Tollygunge, CALCUTTA.
Stockist:—HARRY & SON,
93, China Basaar Rd., MADRAS.

விந்தை உலகம் 'மூர்த்தி'

பூனை இனங்கள்.

சிங்கம் மிருகங்களுக்கு அரசன், வரிப்புலி அதற்கு ஒன்று விட்ட தம்பி இரண்டும் பயங்கரமான மிருகங்கள். சிங்கத்தை விட புலி அபாயகரமானது ஆனால் அதற்கு சிங்கத்தைப்போல கம்பீரமான அழகான பிடரி மயிர் கிடையாதது ஒன்றுதான் குறை. இரண்டும் நமது வீட்டிலுள்ள பூனையின் சந்ததியைச் சேர்ந்தவைதான்.

பூனையைப்போலவே இவைகளுக்கும் இரவில் கண் நன்றாகத்தெரியும். கூர்மையான நகங்களை உள்ளுக்கு வெளியே இழுத்துக்கொள்ள முடியும். எலும்பில் ஒட்டியுள்ள சிறு துண்டு மாமிசத்தையும் சுரண்டி எடுக்க உதவும்படியான சுரசுரப்பான நாக்கும் உண்டு கிழித்துச்சாப்பிட கூறிய பற்கள்.

சிங்கம் ஆப்பிரிக்கா பர்சியா முதலிய இடங்களிலும் இந்தியாவிலும் கூட வசிக்கிறது. ஆனால் இந்தியச் சிங்கத்திற்கு பிடரிமயிர் அவ்வளவு அழகாக இருக்காது. ஒரு சிங்கம் ஒரு மூட்டுக்காளையை ஒரே அறையில் கொன்று கீழே தள்ளி சர்வ சாதாரணமாக இழுத்துக் கொண்டு போய்விடும்.

இதன் பழுத்த மஞ்சள் நிற உடல் இதை சூழ் நிலையிலிருந்து பிரித்துக் காட்டிக்கொடுக்காமல் காப்பாற்ற உதவுகிறது. இரவில் வேட்டைக்கு கிளம்பும் பகலில் புதர்களிலோ, நதியோரத்திலோ படுத்துத் தூங்கும். இருட்டினதும் பயங்கரமாக கர்ஜனை செய்து எல்லா மிருகங்களையும் கதிகலங்கவைக்கும். இது கர்ஜனை செய்யும்போது தன் தலையை நிமிர்த்தி கர்ஜனை செய்யாது. பூமிக்கு சமீபத்தில் தான் வைத்துக்கொள்ளும். இதனால் சப்தம் எங்கிருந்து வருகிறது என்று கண்டு பிடிப்பது கடினம். பயமடைந்தை மிருகங்கள் சப்தம் வரும் திசை தெரியாமல் திகைத்துத் தட்டுக்கெட்டு சிங்கத்தின் முன்னாலேயே போய் விழுந்து கொல்லப்படும்.

புலி ஆசியாவின் எல்லா பாகங்களிலுமே காணப்படுகிறது. இதன் கால்கள் சிங்கத்தை விடக்குட்டையானது. இதைக் காடுகளில் கண்டுபிடிப்பது மிகுந்த கஷ்டம். கருப்பு வரிக்கோடுகளும் ஆரஞ்சு வர்ணமான தோலும் இதை புதர்களின் இடை வெளியிலிருந்து காட்டிக் கொடுப்பதில்லை.

புலிகளில் மிகுந்த பலம் பொருந்தியதும் பயங்கரமானதும் நமது இந்தியப் புலிகள்தான். வங்காளத்துக்காடுகளில் வசிக்கும் புலிகளின் முன்னால் எந்தச் சிங்கமும் நிற்க முடியாது. இருந்தாலும் சிங்கத்தின் கம்பீரமான பார்வையும் பிடரிமயிரின் அழகும்தான் அதை மிருகங்களின் அரசனாக்கி விட்டது.

நன்றாக வளர்ந்த ஒரு வங்காளப்புலியின் நிறை 500 பவுண்டு வரை இருக்கிறது. பூனைக்கும் புலிக்கும் அதன் நிறையில் தான் வித்தியாசம். மற்றபடி சகல அம்சங்களிலும் இரண்டும் ஒற்றுமையானதுதான். பூனையின் நிறை 15 பவுண்டுதான். புலி மிகுந்த பலம் பொருந்தியது. அதுவும் மனிதனை வேட்டையாடும் போது பயங்கரமாக மாறிவிடும்.

புலிவேட்டை மிகுந்த சுவாரஸ்யமானது. அதோடு அபாயகரமானதும் கூட பலர் சேர்ந்து கொண்டு புலியை விரட்டி உறுதியான வலையை அதன் மேல் வீசிப்பிறகு ஈட்டிகளை எறிந்து கொல்வதும் உண்டு.

இன்னொருமுறை, ஒருபொறி அமைக்கப்படும். அதன்பின்னால் ஒரு பெரிய முகம் பார்க்கும் கண்ணாடியைப் பொருத்தி வைப்பார்கள். இது புலி தினசரி நடமாடும் பாதையில் அமைக்கப்படும். அந்தப்பக்கமாக வரும் புலி கண்ணாடியில் தன் சாயலைக்கண்டு இன்னொரு புலி அங்கு நிற்பதாக நினைத்து வாலை முறுக்கிக் கர்ஜித்து கோபத்துடன் குபீர் என்று பாயும். அவ்வளவு தான். மறுநிமிஷம் கண்ணாடிக்கு முன்னால் அமைக்கப்பட்டிருக்கும் இலை தழைகளால் மூடிய குழியில் தலைகுப்புற விழுந்து மாட்டிக்கொள்ளும்.

யானைமீது ('ஹௌடா என்ற') கூடை அமைத்து அதிலிருந்தபடி துப்பாக்கியால் சுடுவதும் ஒருமுறை.

சிங்கம், புலி இவைகளின் குட்டிகள் விளையாடுவது அழகாக இருக்கும். அந்த வயதில் அவைகள் அபாயமற்றவை. பார்க்கவும் அழகாக இருக்கும். ஆனால் சற்றுப் பெரிதானதும் கூண்டுக்குள் விட்டுத்தான் அழகுபார்க்கவேண்டும். ஒருமுறை மனித ரத்தத்தைச் சுவைத்து விட்டால் பிறகு அதை இவைகள் மறப்பதே இல்லை.

மிருக வைத்தியம்:

மிருகங்கள் பறவைகள் முதலியவற்றிற்கு இப்போது வைத்தியசாலைகள் வைத்துச் சிகிச்சைகள் செய்கிறார்கள் அல்லவா? ஆனால் மிருகங்கள் தங்களுக்கு ஏதாவது உடலில் கோளாறு ஏற்பட்டால் அவற்றைத்தாங்களே சீர்திருத்திக் கொள்கின்றன.

சில உதாரணங்களைப் பாருங்கள். சிறு மான் குட்டி காய மடைந்தால் காயம்பட்ட பாகத்தில் சூரிய வெளிச்சம் படும்படி படுத்து கிடக்குமாம். சூரிய வெளிச்சம் காயங்களைக் குணப்படுத்தக் கூடியது. காயத்தைத் தன் நாக்கினால் நக்கிச்சுத்தம் செய்து கொள்கிறது. சில பறவைகளும் மிருகங்களும் சில சமயங்களில் சில பச்சிலைகளைத் தின்கின்றனவாம். அதைச் சோதித்ததில் அது சில நோய்களைக்குணப்படுத்தக் கூடியவை என்று கண்டுபிடிக்கப் பட்டதாம். இந்த இலைகளை இவைகள் ஆகாரமாக சாப்பிடுவதில்லை. மருந்தாகச் சாப்பிடுகின்றன. வான்கோழிகள் மழையில் நனைந்து விட்டால் ஜலதோஷம் பிடிக்காதிருக்க ஒரு வகை இலையைச் சாப்பிடுகின்றன.

சில பறைவைகள்—குருவி மைனா போன்றவை—புழுதியில் புரண்டு தன் உடல் முழுதும் புழுதியைப் பூசிக்கொள்வதைப் பார்த்திருக்கலாம். இதுவும் ஒரு வகை சிகிச்சைதானாம். குதிரைகள் புழுதியில் புரளுவதைப் பார்க்கிறோம். இது விளையாட்டிற்காகப் புரளவில்லை. அதன் களைத்த உடலுக்கு அது ஒரு சிகிச்சை. கோழிக்குஞ்சு முதலியனவும் இப்படி புழுதி ஸ்நானம் செய்கின்றன.

கரடிகள் தங்கள் உடல் தளர்ச்சியைப் போக்க சூடான கந்தக ஊற்றுகளைத்தேடி ஸ்நானம் செய்யச்செல்கின்றனவாம்.

பூனைகள் சில சமயம் பசும்புல்லைத்தின்று வயிற்றுக் கோளாறை சீர்படுத்திக்கொள்கின்றன.

அங்கும் இங்கும் "வாசுகி"



1. பாஸ்ட்ரம் (Bass Dram) 2. டாம் டாம் 3. பக்க டமாரம் 4. கெட்டில் டிரம் 5. பிரோவில் நாட்டு ஸ்வதேசி மர டமாரம் 6. மேற்கு ஆப்பிரிக்கா கோல்ட் கோஸ்டில் உபயோகிக்கும் டமாரம் 7. பசிபிக் தீவில் உள்ள சிலை போலக் குடைந்த மர டமாரம் 8 மத்திய ஆப்பிரிக்கா நாட்டிய டமாரம் 9. பெல்ஜியன் காங்கோவிலுள்ள டமாரம்.

சில டமாரங்கள்!

முதல் முதலில் ஆதிகாலத்து மனிதர்கள்—சரித்திரத்துக்கும் முற்பட்ட முதல் மனித வர்க்கம்—ஒரு கூட்டத்தாரிடமிருந்து அடுத்த காட்டிலுள்ள மற்றொரு கூட்டத்தாருக்குச் செய்திகளை அனுப்ப என்ன சாதனங்களைத் தெரியுமா உபயோகித்தார்கள். பெரிய மரங்களின் அடிமரத்தைக் குடைந்து அதன்மேல் குச்சிகளைக் கொண்டு தட்டினார்கள். அதிலிருந்து எழும் விதவிதமான. வினோத சப்தங்களைச் செய்தி அறிவிப்புகளாக மாற்றி வெகுதூரம் அனுப்பிவந்தனர். இதுவே அக்காலத்தில் சங்கீதக் கருவியாகக்கூட உபயோகப்பட்டது. இன்றைக்குக் கூட ஆப்பிரிக்காவிலும் இந்தியாவின் பலபாகங்களிலும் அமெரிக்கா, ஆஸ்திரேலியா போன்ற பல தேசங்களிலும் உள்ள புராதனக் குடிகள் இம்மாதிரி டமாரங்களை உபயோகிப்பதைக் காணலாம்.

இவ்வித சப்தங்கள் பிரயாணம் செய்யும் விதம் அழகானது. முதலில் ஒருவன் குடைந்த மரத்தில் சப்தமுண்டாக்கி செய்தியை ஒலி பரப்புவான். வெகுதூரத்தில்—அந்த சப்தம் கேட்கும் கடைசி எல்லையில் உள்ளவன் அதை உன்னிப்பாகக் கிரஹித்து அதை அப்படியே தன் டமாரத்தினால் மறுபடி ஒலி பரப்பி மேலே அனுப்புவான். இந்த சப்தங்களுக்கு பொருள் உண்டு. இப்போது தந்தியில் 'கட்டு கட்டு கட்டு கட்டு' என்று வரும்பலவித சப்தங்களை வாசகங்களாக மாற்றுவது போல. இவ்விதமாக இந்தச்செய்திகள் பல நூறுமைல்கள் கூடச் செல்லும்.

கிண்ணம் போன்ற மரத்தாலான ஒரு தொட்டியின் மேல்பாகம் தோலினால் மூடப்பட்டிருக்கும் இதை குச்சியினால் தட்டி சப்தம் செய்வார்கள். சில கோயில்களில் இப்போது கூட நகாரா அடிப்பது உண்டு. அது இந்த முறை தான். 'கோல்ட் கோஸ்ட்' என்ற இடத்திலுள்ள ஸ்வதேசிகள் யானையின் காதுகளை டமாரத்தோலாக உபயோகிப்பார்களாம்

ஒவ்வொரு நாட்டிலும் பல வினோதமான விசித்திரமான டமாரங்கள் பழக்கத்திலிருக்கின்றன. அவைகளில் சிலவற்றை மட்டும் மேலே கொடுத்திருக்கிறேன் பாருங்கள். டமாரங்களைத் திறமைசாலிகளினால் தான் சரியானபடி கையாளமுடியும்.

Printed at Trichinopoly United Printers Limited., Trichinopoly, and Published by Thiruloka-Sitharam (Editor).